Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் –16 | திருவள்ளுவர் ஆண்டு– 2036 | மாசி–28 | 12–03–2005 | சனிக்கிழமை | ஓசை 22


S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247 (சி-11455)

# நோர்வே வரைவை ஏற்றுள்ளோம்; பொதுக்கட்டமைப்பு விரைவில் தேவை!

## நோர்வே வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் பின்னர் சு.ப.தமிழ்ச்செல்வன்



(ஒஸ்லோ)

**சுனாமி நிவாரணப்பொதுக்கட்டமைப்புக் குறித்து நோர்வேத் தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள வரைவை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம். இப்பொதுக் கட்டமைப்புத் தாமதமின்றி விரைவில் ஏற்படுத்தப்படவேண்டும் என நோர்வே வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் போது தான் வலியுறுத்தியதாக அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

மேலும் அவர் தெரிவிக்கையில்: சுனாமி நிவாரணப் பொதுக் கட்டமைப்புக்குறித்து நோர்வேத் தரப்பால் முன்வைக்கப்பட்ட வரைவை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்.சில குறைகள் அதில் இருந்தாலும் அதைஏற்றுக் கொண்டுள்ளோம்.இது சிறிலங்கா அரசாங்கம் வரைவுடன் இணங்கிப் போவதற்கு ஊக்கமளிப்பதாகும்.

முன்னர் முன்வைத்த முன்மொழிவு பல மாற்றங்களாலும் மாற்று வரைவுகளாலும் இணங்கிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினையில் தீர்மானங்களை எடுப்பதில் அமெ.தொடர்புபடவில்லை

### - அமெ.தூதுவர் தெரிவிப்பு

இலங்கைத் தீவகத்தின் இனப்பிரச்சினை தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் செயற்பாடுகளில் அமெரிக்கா எவ்விடயத்திலும் தொடர்புபடவில்லை என சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் ஜெ.ஃ.ரி லாங்ஸ்ரற் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு அமெரிக்கா பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனவும் அவர் கூறியுள்ளார். கண்டிக்குப் பயணம் மேற்கொண்ட ஜெ.ஃ.ரி லாங்ஸ்ரற் இதனைத் தெரிவித்தார். இந்த பயணத்தின் போது அமெரிக்கத் தூதுவர் தலதாமாளிகைக்கும் பயணம் செய்தார். ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாகவும் ஜெ.ஃ.ரி லாங்ஸ்ரற் கூறினார்.

## மட்டக்களப்பு புளொட் அலுவலகம் மீது இனந்தெரியாதோர் குண்டுத் தாக்குதல்

### – நால்வர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்கப்பிலுள்ள புளொட் அலுவலகத்தின் மீது நேற்றுப் பிற்பகல் 1.55 மணியளவில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் நான்கு பேர் படுகாயம் அடைந்து மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

45 வயதுடைய காந்தன் என்று அழைக்கப்படும் பாலசுந்தரம், என்.சிவராசா, எஸ்.பகீரதன் ஆகியோரும்அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்த சிறுவன் ஒருவனும் காயமடைந்துள்ளனர்.

புளொட் அலுவலகத்தின் பின்னால் உள்ள காட்டிற்டாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## துன்னாலையிலும் சிப்பாய் வெறித்தனம் படையினருக்கெதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியிலுள்ள துன்னாலையின் கலிகைச் சந்திப் பகுதியில் இருக்கும் வீடொன்றிற்குச் சென்ற சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் அவ்வீட்டிலிருந்த பெண்களுடன் தகாதமுறையில் நடந்து கொள்ளும்நோக்குடன் நடந்து கொண்டதையடுத்து அவ்வூர் மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே பெரும் மோதல் ஏற்பட்டது. இதனையடுத்து அங்கிருந்த இராணுவ முகாம் ஒன்று பொது மக்களால் தீ வைத்து கொழுத்தப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருதாவது,

மேற்படி கலிகைச் சந்திக்கு அருகிலுள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் தமது முகாமிற்கு அருகிலுள்ள வீடொன்றிற்கு நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை சென்று அவ்வீட்டிலுள்ள பெண்களுடன் தகாத முறையில் நடந்து கொள்வதற்கான முயற்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வலி.கிழக்கு கி.அ.சம்மேளனம் படையினரின் அடாவடிக்குக் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவச்சிப்பாய் நீர்வேலியில் வயோதிப மாதுமீது பாலியல்வல்லுறவை மேற்கொள்ள எடுத்த முயற்சியை வன்மையாகக் கண்டித்துள்ள வலி.கிழக்குப் பிரதேச கிராமிய அமைப்புக்களின் சம்மேளனம் படையினரின் இவ்வாறான நடவடிக்கைகளுக்கெதிராக போராடுவதற்கு அறைகூவல் விடுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நீர்வேலி தெற்குப்பகுதி யில் தனித்திருந்த வயோதிபப் பெண் மீது மேற்கொள்ளப்பட்ட சிறிலங்கா இராணுவச்சிப்பாயின் பாலியல் வன்முறை முயற்சி சிறிலங்கா அரசாங்கத்தின் பேரினவாத ஏவலர்களின் வக்கிர உணர்வுகளது வெளிப்பாடாக மட்டுமன்றி, தமிழ் மக்களை அனைத்து வழிகளிலும் ஆக்கிரமிக்கின்ற மேலாதிக்க வெறித்தனப் போக்காகவும் கொள்ளவேண்டியுள்ளது.

அப்பாவி வயோதிப மாது மீதான பாலியல் வன்முறையை நாம் கண்டிப்பதுடன், இனிமேலும் இது போன்ற செயற்பாடுகளை தமிழ்மக்கள் பொறுத்திரார் என் பதையும் கூறிவைக்க விரும்பு கின்றோம். பொறுமையின் விளிம்பு வரை வந்துள்ள தமிழ்மக்களாகிய நாம், எமக்குள்ள உயரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் எமது எதிர்கால சுதந்திரவாழ்வை நாமே

(12ஆம் பக்கம் பார்க்க)

## தொழில்நுட்பக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது!

(முல்லைத்தீவு)

பொருண்மிய மதியுரையகத்தால் முல்லைத்தீவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுக்காலை 11.00 மணியளவில் இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளவும் நிர்மாணிப்பதற்காக (டபிள்யூ.யூ.எஸ்.சி) நிறுவனம், ஜப்பான் ரெக் மற்றும் ஏனைய நிறுவனங்களின் அனுசரணையுடன் இத்தொழில்நுட்பக் கல்லூரிக்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இவ்அடிக்கல் நாட்டும் நிகழ்வுக்கு முல்லை.மாவட்ட பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் வை.விமலேந்திரன் தலைமை தாங்கினார். மங்கல விளக்கினை முல்லை.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனத்தின் தலைவர் சிவனடியார், முல்லை.மாவட்ட வைத்தியகலாநிதி டாக்டர் தர்மேந்திரா ஆகியோர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உந்துருளியை ராணுவ ரக் மோதியது; சாவகச்சேரியில் மூண்ட கலவரம்!

### - பொதுமக்கள் ஏழு போர் காயம்

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் இராணுவ ரக் வண்டி உந்துருளியில் வந்தவரை மோதிவிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட வேளை படையினருக்கும், பொதுமக்களுக்குமிடையில் பெரும் கலவரம் மூண்டது. இதில் இராணுவக் காவலரண் மூன்றும், இராணுவ ரக் வண்டியும் பொது மக்களால் அடித்து நொருக்கப்பட்டது.

சாவகச்சேரியில் நேற்று மதியம் கடைக்குச் சென்று விட்டு உந்துருளியில் வீட்டுக்குத்திரும்பிக் கொண்டிருந்த சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள கோயில் குடியிருப்பைச் சேர்ந்த மனோகரன் வயது (45) என்பவர் மீது இராணுவ ரக் சாவகச்சேரி நகரச் சந்தியில் வைத்து பலமாக மோதியதால் அவர் படு காயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து படையினரின் வாகனத்தை அவ் விடத்திலிருந்து எடுத்துச் செல்ல முற்பட்ட படையினருக்கும், பொது மக்களுக்கும் இடையில் பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது. பொதுமக்களைப் படையி

(12ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

நீதிமன்றம் முன்பாக இயங்கிய எமது நிறுவனம் மக்கள் வங்கியிலிருந்து யாழ்.நோக்கி 200 M தூரத்தில் கமலாஸ் ஸ்ரூடியோவிற்கு அருகாமையில் இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். இரத்தினம் (இரட்னாஸ்) உதிரிகள் வாணிபம், கிளிநொச்சி. (5790)

### காணி விற்பனைக்கு

பளை மத்தியகல்லூரிக்கு வடக்குப் பக்கமாக தம்பகாமம் கிராம அலுவலர் பிரிவில் 08 பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. விலைபேசித் தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு:- ஆனந்தரூபன், உ.அ.அதிபர் பணிமனை, கண்டாவளை. (5786)

### வகுப்புக்கள் ஆரம்பம்

2006,2007 A/L மாணவர்களுக்கான இணைந்த கணித வகுப்புக்கள் இரு பிரிவுக்கும் ஆரம்பம். 12.03.2005 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 2006 மாணவர்களுக்கும், பிற்பகல் 5 மணிக்கு 2007 மாணவர்களுக்கும் கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர், கிளிநொச்சியில் ஆரம்பம். ஆசிரியர் S.சிறிதரன். (5787)

### விற்பனைக்குண்டு

சீமேந்துக்கல் விற்பனைக்குண்டு அளவு -12"x4"x6" விபரங்களை அன்பு வாணிபத்தில் அறியலாம். தொடர்புகளுக்கு. F.A அமலதாஸ்: அன்பு பல்பொருள் வாணிபம், அந்தோனியார் கோவிலடி, அளம்பில்.(5492)

### விற்பனைக்குண்டு

நகைக்கடைப் பாவனைக்கும், வீட்டுப்பாவனைக்கும் உகந்த திண்டுக்கல் இரும்புப்பெட்டிகள் (IRON SAFE) எல்லா அளவுகளிலும் விற்பனைக்கு இருக்கின்றன. (தொடர்புகளுக்கு:-இல.13, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்). (5363)

### தரம் 5 மாணவர்களுக்கானது

தரம்:05 மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு 12,03,2005 மு.ப10.00 மணிக்கும் பரீட்சை; மு.ப 12.00 மணிக்கும். கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர், கிளிநொச்சியில் நடைபெறும். ஆசிரியர். S.ரமேஸ் (5787)

### தவறிவிட்டது

அந்தோனிப்பிள்ளை சகாய மோகன் 59 கென்னடிவீதி, நாவாந்துறை யாழ்ப்பாணம் என்பவரின் தேசிய அடையாள அட்டை முகமாலைக்கும்-பளைக்கும் இடையில் 11.03.2005 காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது சிமாட் தையலகம் கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். தகவல்:-அ.சகாய மோகன். (5791)

# சமாதான நடவடிக்கையின் தற்போதைய நிலைகுறித்து பாராளுமன்றில் ஆராய ஒருநாள் விவாதம் வேண்டும்

*–இரா. சம்பந்தன் கோரிக்கை*

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னர் சமாதான நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதால் அரசாங்கத்தின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை குறைந்து செல்கிறதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் சபாநாயகரின் விசேட அனுமதியுடன் இரா. சம்பந்தன் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து மூன்று வருடங்கள் கழிந்துள்ளன. எனினும் கடந்த காலங்களில் சமாதான செயற்பாடுகள் தொடர்பாக எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை குறித்து மக்கள் விடுதலை முன்னணி முரண்பட்டதாலேயே பேச்சுக்களை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், இவ்வாறான சூழலை மக்கள் விடுதலை முன்னணி உருவாக்கியுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியினர் காட்டி வரும் எதிர்ப்பானது சமாதான நடவடிக்கைகளைப் பின்னடைவிற்கு இட்டுச்செல்கிறது. சமாதானப் பேச்சுக்கள் குறித்து அரசாங்கம் தெளிவான நிலைப்பாடு ஒன்றை அறிவிக்கவில்லை என்றார். சமாதான நடவடிக்கைகளின் தற்போதைய நிலை குறித்துப் பாராளுமன்றத்தில் ஆராய்வதற்கு, ஒருநாள் விவாதத்திற்கு திகதியை ஒதுக்கித்தர வேண்டும். இவ் விவாதத்தை ஏப்பிரல் மாதத்தின் முற்பகுதியில் நடத்துவது பொருத்தமானது.

# சத்தியசாயி சேவாவின் இலவச மருத்துவ சேவை

(வவுனியா செய்தியாளர்)

ஸ்ரீசத்தியசாயி பகவான் சேவா சமித்தியின் லண்டன் கிளையினால் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுகக்குடியிருப்பு, திருகோணமலை, கும்புறுப்பிட்டி, கல்முனை ஆகிய இடங்களில் இலவச மருத்துவ சேவை வழங்கப்படவுள்ளது.

இவ்இலவச மருத்துவசேவை நாளை மறுதினம் தொடக்கம் 23 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இம்மருத்துவ சேவையினை வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் 90 வைத்தியர்கள் வழங்கவுள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மக்களுக்காகவே இவ்இலவச மருத்துவசேவை வழங்கப்பட உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (10)

### -வவுனியா தெற்கு கல்வி வலய-

# ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி செயலமர்வுகள்

வவுனியா செய்தியாளர்)


வவுனியா தெற்கு கல்வி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சேவைக் காலப் பயிற்சி செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

தரம் 5இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும், நாளையும் வவுனியா தெற்கு கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதேபோன்று அழகியற் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. தரம் எட்டு தொடக்கம் தரம் 11வரையான வகுப்புக்களுக்கு சமூகக்கல்வியும் வரலாறும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 26ஆம்திகதி சைவப்பிரகாச மகளிர் கல்லூரியிலும், தரம் 3,4 வகுப்புக்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் எதிர்வரும் 25,26ஆம் திகதிகளில் சைவப்பிரகாச மக்ளிர் கல்லூரியிலும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களுக்கு தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 19ஆம் திகதி சைவப்பிரகாச மகளிர் கல்லூரியிலும் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

இச்செயலமர்வுகளுக்கு உரிய ஆசிரியர்களைச் சமூகமளிக்குமாறு வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி இன்றும் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட சமூகக் கல்வியும் வரலாறும், சைவ சமய பாடச் செயலமர்வுகள் நடைபெற மாட்டாது. எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (10)



உதயநகர் விவேகானந்தநகர் கிராமங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள மேற்படி வீதியின் நடுப்பகுதி மழைநீரினால் அரிக்கப்பட்டுப் பாரியகுழியாக மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் உள்ளதனைப் படத்தில் காண்க. (சோ)



முல்லை.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் அனுசரணையுடன் கடந்த 5 ஆம்திகதி புலம் பெயர்ந்து வாழும் மக்களின் நிதியில் முல்லை.பங்குத்தந்தையால் கள்ளப்பாடு கிராம மக்களுக்கு முதற்கட்டமாக வீச்சுவலை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:சகிலா)

பளை, பூநகரி வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவ மாதர்களிடமிருந்து

## விண்ணப்பங்கள் கோரல்

பளை,பூநகரி வைத்தியசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவமாதர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத்திகதி:- 31.03.2005

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

மா.சு.சே.பி.பணிப்பாளர்,
கிளிநொச்சி.

தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "பளை, பூநகரி வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கான விண்ணப்பம் எனக்குறிப்பிடவும்.

**வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி,**
**மா.சு.சே.பி.பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

(சி.11555)

## சாவு அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை நடராசா

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும்,D8, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நடராசா அவர்கள் 11.03.2005 நேற்று காலமானார். இவர் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும்,ஜெயந்தி(அழகன் பதிப்பகம்), ஜெகதீஸன் (பிரான்ஸ்), சிவநந்தினி (அழகன் பதிப்பகம்), சிவகுமார் (தமிழீழ சுகாதாரப் பிரிவு புதுக்குடியிருப்பு) அவர்களின் பாசமிகு தந்தையும், லலிச்சந்திரன் (கண்ணிவெடிப்பிரிவு), (காலஞ்சென்ற) சந்திரன், ரஞ்சனி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோஜன், டினோஜன், அனிஸ்ரன், தனேஸ், தினேஸ், தனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.03.2005 இன்று 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் உருத்திரபுரம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(சி.11556)

### மகாகும்பாபிஷேகம்

(விசுவமடு)

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய புனருத்தான பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நாளை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (14)

### கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கதிரமலை பிரசாந் இல:21 திருவையாறு என்பவரது தேசிய அடையாள அட்டை இல:8714421 V மற்றும் சில ஆவணங்களுடன் வவுனியா பேருந்து நிலையத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும். (சோ)

## தமிழீழப் போக்குவரவுக் கழகம் அரச பணியாளர்களுக்கான பேருந்துப்பணி பளை நகர்–முகமாலை

அரச பணியாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 12.03.2005 இன்று தொடக்கம் பளை நகரிலிருந்து மாலை 04.20 மணிக்குப் புறப்பட்டு முகமாலை சென்றடையும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**முகாமையாளர்**
**பேருந்துப்பகுதி,**
**கிளிநொச்சி.**

(சி.11389)

# தமிழ் மண்ணில் இராணுவம் இருப்பது பெண்களின் முன்னேற்றத்திற்கு சவாலாகவுள்ளது

**யாழ். மாவட்ட பா.உ பத்மினி சிதம்பரநாதன்**

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மண்ணில் சிங்கள இராணுவம் இருப்பது பெண்களின் முன்னேற்றத்திற்கான பணிகளைப் புரிவதற்கு பெரும் இடர் தருகின்ற சவாலாக உள்ளது என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.**

நீர்வேலியில் நேற்று முன்தினம் வயோதிபப் பெண் மீது இராணுவச் சிப்பாய் பாலியல் வல்லுறவு முயற்சியில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:- நீர்வேலியில் 63 வயதுடைய ஒரு பெண்ணின் மீது பாலியல் வல்லுறவு செய்ய முயற்சித்த சம்பவம் பற்றி அறிந்தோம். இச் சம்பவத்தை நாம் கண்டிக்கின்றோம். ஏற்கனவே மார்ச் 08 சர்வதேச மகளிர் தினத்தில் இராணுவத்திற்கு அமைதியான முறையில் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழ் மண்ணில் குடிசைகளின் அருகில் தொடர்ந்து நிலை கொண்டிருப்பது தமிழ் மக்களின் இயல்பு வாழ்விற்கு குறிப்பாக பெண்களின் வாழ்விற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்று சொல்லியிருந்தோம்.

இன்று உலகம் முழுவதிலும் பெண்கள் சமூக வாழ்விலும் அரசியலிலும் செயலாக்கமான பங்கு வகிக்க வேண்டும் என்பது சர்வதேச அரங்குகளில் பேசப்படும் விடயம்.

தமிழ்த் தேசியப் போராட்டம் பெண்கள் வெளியே வந்து தனது ஆற்றல்களை வளர்த்துக் கொண்டு சமூக, அரசியல் வாழ்வில் செயலூக்கமான பங்கு வகிப்பதற்கான சாதகமான களநிலைமையை உருவாக்கி இருக்கின்றது.

நீர்வேலியில் நடந்த சம்பவம் மேலும் இதை நிரூபித்து காட்டுகிறது. இத்தகைய சம்பவங்கள் மேலும் மேலும் அதிகரித்து இனங்ளுக்கிடையில் ஒரு மோதல் நிலைமை உருவாகி விடக்கூடிய ஒரு விளிம் பில் நாம் உள்ளோம்.

எனவே உடனடியாகத் தமிழர்களின் குடிமனைகளிலிருந்து சிங்கள இராணுவம் விலக வேண்டும் என்பதை மீண்டும் ஒரு முறை வலியுறுத்திக் கூறுகின்றோம் என அவர் தெரிவித்தார். (33)

— நீர் வேலியில் வயோதிபப் பெண்மீது —

## பாலியல் வல்லுறவுக்கு முயற்சித்த இராணுவச் சிப்பாய் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலி வில்லுமதவடிப் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முற்பட்ட சிறிலங்கா இராணுவச் சிப்பாய் தப்பி ஓடி தலைமறைவாக முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் நீர்வேலிப் பகுதியில் வைத்து அப்பகுதியைச் சேர்ந்த வயோதிப மாது வை பாலியல் வல்லுறவுக்குட் படுத்த முற்பட்ட சிறிலங்கா இராணுவச் சிப்பாயான ஆர்.எம் விமலரட்ணா என்பவர் சம்பவ இடத்திலிருந்து நழுவி பேருந்து மற்றும் வாடகை முச்சக்கர வண்டிகள் என்பனவற்றின் உதவியுடன் தப்பி ஓடி காங்கேசன் துறை இராணுவ முகாமிற்குள் சென்று பதுங்கிக் கொண்ட வேளை இராணுவப் பொலிசாரின் உதவியுடன் அவரை யாழ் கோப்பாய் பொலிசார் நேற்று முன் தினம் இரவு ஏழு மணியளவில் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்துள்ளனர். (33)

## கூட்டுறவுச் சங்கங்களில் மாவின் விலை 30 ரூபா!

யாழ். மாவட்ட மக்களின் கோதுமை மாவின் நுகர்ச்சித் தேவையைக் கருத்திற் கொண்டு அதன் விலை அதிகரிப்பைத் தீர்க்கும் முகமாக இறக்குமதி செய்த மாவை யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அனைத்துப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகித்து வருகின்றது.

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மாவின் ஆகக்கூடிய சில்லறை விலையை 30ரூபாவாக நிர்ணயித்துள்ளது. அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் மேற்குறிப்பிட்ட விலையைப் பின் பற்றுமாறு சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் கேட்டுள்ளார். (சு)

## பாணின் விலை அதிகரிப்பு; பொதுமக்கள் பாதிப்பு

யாழ். குடாநாட்டில் பாணின் விலை 2 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டிருப்பதினால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பின் காரணமாக இதுவரை காலமும் 20 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வந்த 450 கிராம் கொண்ட ஒரு இறாத்தல் பாணின் விலை கடந்த 5ஆம் திகதி தொடக்கம் 22 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இவ் விலை அதிகரிப்பானது வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மக்களிற்கு பெரும் தாக்கத்தை உருவாக்கியுள்ளது. (33)

## யாழ்- பருத்தித்துறை வீதி புனர்நிர்மாணம் செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி நவீன தொழில் நுட்பத்துடன் புனர் நிர்மாணம் செய்யப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த வீதி இவ்வாண்டளவில் இவ்வாறு புனரமைக்கப்படும். இந்த வீதிகள் அகலமாக்கப்படும்போது பொதுமக்கள்- மழைநீர் வழிந்தோடுவதற்கு ஏதுவாகத் தேவையான இடங்களில் தமது வேலிகளை நகர்த்தி உதவி செய்தால் காலதாமதம் இல்லாமல் பணிகளைச் செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

~யாழ். குடாநாட்டில்~

## தெங்குப் பயிர்ச்செய்கைக்கு ஆக்கபூர்வ நடவடிக்கை இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தெங்குப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்ய ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதனையும் அரசாங்கம் எடுக்கவில்லையென தெங்குப் பயிர்ச்செய்கையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த கால யுத்த அனர்த்தம், சட்ட விரோத தென்னை மரத்தறிப்புக்கள், இராணுவக் குண்டு வீச்சுகளால் ஏற்பட்ட தென்னை மர அழிவுகள் மற்றும் அரச படைகளின் அரண் அமைப்பு நடவடிக்கைகள் எனப் பல காரணங்களால் யாழ். குடாநாட்டில் பல இலட்சக் கணக்கான தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

எனினும் அரசோ அல்லது பெருந் தோட்டக்கைத்தொழில் அமைச்சோ இது குறித்துக் கவனமெடுத்து யாழ். குடாநாட்டின் தெங்குப் பயிர்ச்செய்கையை மீளக் கட்டியெழுப்ப முன் வராததினால் இங்கு தெங்குச்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (33)

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு கரித்தாஸ் நிறுவனம் உதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு கரித்தாஸ் சர்வதேச நிறுவனம் முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் குடியிருப்புக்களை இழந்தவர்களுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு வீடுகளைக் கட்டிக் கொடுக்கப் போவதாகவும் கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கவுள்ளதாகவும் நிறுவனத்தின் செயற்றிட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

வீடமைப்புத் திட்டங்கள் இரண்டு வருடங்களுக்குள் பூர்த்தியாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

–சுனாமியால் பாதிக்கப்பட்ட–

## வெளி இணைப்பு இயந்திரங்களின் திருத்த மதிப்பீடு தயார்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வெளி இணைப்பு இயந்திரங்களைத் திருத்துவதற்கு சுமார் ஏழு மில்லியன் ரூபா வரையில் செலவு ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனை கெயர் நிறுவனம் பொறுப்பெடுத்து கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை காரைநகர் தொடக்கம் சுண்டிக்குளம் வரை நடைமுறைப் படுத்தவிருப்பதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## ஒன்றியம் அங்குரார்ப்பணம்

(நல்லூர்)

யாழ் மாவட்ட சிகை அலங்காரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றிய பொறுப்பாளர் சுதாஸ் யாழ்ப்பாணம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் செழியன் ஆகியோர் கலந்துகொண்டனர். (41)

## 3 பாடசாலை அதிபர் பதவிகளுக்கு வெற்றிடம் நிலவுகின்றது

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை , உயரப்புலம் குணபாலன் வித்தியசாலை, பண்ணாகம் வடக்கு அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றிற்கு அதிபர் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இந்த அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தினை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு எதிர் வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி இதற்கு விண்ணப்பிக்க முடியுமென வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார்.

### அறநெறிப் பாடசாலை அங்குராப்பணம்

( நல்லூர்)

கோண்டாவில் வடக்கு வாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகத்தினரால் அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (41)

## நீரிறைக்கும் இயந்திரம் வழங்கல்

(நெடுந்தீவு)

யாழ். நெடுந்தீவு பிரதேச சபைக்கு நிகொட் திட்டத்தின் கீழ் நீரிறைக்கும் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபையின் சுத்திகரிப்பு வேலைகளை இலகுபடுத்துவதற்காகவே இந் நீரிறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. (33)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் 5 மையக் கிராமங்கள் தெரிவு

(தென்மராட்சி)

நியாப் திட்டத்தின் உதவியுடன், தென்மராட்சிப் பிரதேசத்தில் மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள ஐந்து கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவை மையக் கிராமங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டுவில், குடமியன், வெள்ளாமபோக்கட்டி, கரப்பக் குறிச்சி, கைதடி கிழக்கு போன்ற கிராமங்களே இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி இக் கிராமங்களில் சாலைகளை நிறுவுதல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல் குளங்களைப் புனரமைத்தல், மின்சார வசதிகளை மேம்படுத்தல், முன்பள்ளிகளை அமைத்தல், கிணறுகள் அமைத்தல் மற்றும் கடன் வசதிகளை மேம்படுத்திக் கிராமியக் கைத்தொழில்களை ஊக்குவித்தல் என்பன நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக தென்மராட்சிப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. (28)




கட்டளைத் தளபதி கேணல் தீபன் கேணல்கிட்டு நினைவுக் கேடயத்தை வழங்குவதை முதலாவது படத்திலும், கேணல்விதுஷா பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும், அரசியல்துறைதுணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்:-சோதி)

# புலிகளின் குரல் நிறுவனத்தில் இடம் பெற்ற கேணல் கிட்டு


# 12 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வும், முத்தமிழ் கலையரங்கும்

(அலுவலக செய்தியாளர்)

**புலிகளின் குரல் நிறுவனத்தினால் நடாத்தப் பெற்ற கேணல். கிட்டு அவர்களின் 12 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வும், சிறப்பு முத்தமிழ் கலையரங்கமும் நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணிக்கு புலிகளின் குரல் நடுவப் பணியக அமலன் அரங்கில் நடைபெற்றது.**

புலிகளின் குரல் நிறுவன துணைப் பொறுப்பாளர் செயல் வீரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச்சுடரினை மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி பொன் தியாகம் ஏற்றிவைக்க கேணல் கிட்டு அவர்களின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை போராளி தமிழ்க்கவி ஏற்றிவைத்தா. தொடர்ந்து திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை தளபதி கேணல் தீபன் அணிவித்தார்.

தலைமையுரையினையடுத்து சிறப்புரையினை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து புலிகளின் குரல் நிறுவனத்தின் 2004ஆம் ஆண்டிற்கான நாளாந்த அவதானிப்பு வினாவிடைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தளபதி கேணல் தீபன், தளபதி கேணல் விதுஷா ஆகியோர் வழங்கினர். அத்துடன் 2004 ஆம் ஆண்டின் சிறந்த வானொலி மன்றமாக தெரிவு செய்யப் பெற்ற விசுவமடு வானொலி மன்றத்திற்கு கேணல். கிட்டு அவர்களின் நினைவுக் கேடயத்தினை கட்டளைத் தளபதி கேணல் தீபன் அவர்கள் மன்றத் தலைவர் கந்தசாமியிடம் வழங்கி வைத்தார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (சோ)




வரவேற்பு நடனம்

## ஒக்ஸ்பாம் நிறுவனத்தினரால் ஆலடிக் கிராம மக்களுக்கு நிதியுதவி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி ஆலடிக் கிராமத்திலுள்ள மக்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவன உதவியுடன், கிளி/கிழக்கு புனர்வாழ்வுக்கழகத்தினரால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

ஆலடிக் கிராமத்தில் சிறு வியாபாரம், நெற்செய்கை என தெரிவு செய்யப்பட்டு சிறு வியாபாரத்திற்கென பத்து பேருக்கு ஐயாயிரம் ரூபாய் வீதம் ஐம்ப தாயிரம் ரூபாவும், நெற் செய்கைக்கு 15 பேர் தெரிவு செய்யப்பட்டு தலா 15000 ரூபா வீதமும் வழங்கப்பட்டு வருகிறது. மற்றும் ஏணைய கிராம மக்களுக்கும் நிதியுதவி வழங்க ஏற்பாடாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.(12)

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இல.செஞ்சிலுவைச்சங்கம் உதவி

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைமைச்செயலகப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு விஜயம் மேற்கொண்டு அங்கு கல்விபயிலும் மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் பாடசாலைச் சீருடைகளை வழங்கினர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமைச் செயலகத் தலைவர் ஜெயத் அபேசிங்க, செயலர் நிமால்குமார், சுனாமி அனர்த்த இலங்கை செஞ்சிலுவைச்சங்க செயலணிக்குழுத் தலைவர் திஸ்ஸ அபேவிக்கிரம மற்றும் கிளி.மாவட்ட செஞ்சிலுவைச சங்கத்தலைவர் கார்த்திகேசு, செயலர் க.கணேஸ் மற்றும் சங்கப்பிரதிநிதிகள் மேற்படி பாடசாலைக்கு நேற்று முன்தினம் நேரில் விஜயம் மேற்கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு மேற்படி பொருட்களை வழங்கியதுடன், உடுத்துறை முதல் கேவில் கிராமம்வரையான சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடுபுடவைகளையும் வழங்கினர்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கிராமம் முதல் மாமுனை கிராமம் வரை சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடுபுடவைகளைக் கடந்த திங்களன்று யாழ்மாவட்ட செஞ்சிலு வைச் சங்கத்தினர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

வடமராட்சி கிழக்கு மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் மூவேந்தன் உடுத்துறை ம.வி.அதிபர் ஆகியோரின் நெறிப்படுத்தலில் மேற்படி பொருட்கள் வழங்கப்பட்டன. (சோ)

## அம்பாறையில் தற்காலிக குடியிருப்புக்களை தொடர்ந்து நிறுவிவரும் த.பு.கழகம்!


(அலுவலக செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் கடற்பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிகக் குடியிருப்புகளைத் தொடர்ந்தும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அமைத்து மக்களை உடனுக்குடன் அதில் குடியமர்த்தியும் வருகின்றது.

அந்தக் குடியிருப்புக்களில் வாழ்ந்து வரும் மக்களின் அன்றாட வாழ்வியல் நடைமுறை அம்சங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அந்தந்த குடியிருப்புக்களில் வாழ்ந்து வருகின்ற மக்கள் வழமையான தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதையும் , பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்றுவருவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக் கின்றது.

இதேவேளை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் அம்பாறை மாவட்டத்திலுள்ள கவடாப்பிட்டியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் குடிமனைகளைக்கொண்ட குடியிருப்பிலுள்ள மக்களுக்கு அதாவது ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஆயிரத்து ஐந்நூறு ரூபா (1500/=) பெறுமதியான பொருட்கள் அடங்கிய பொதிகளை மத்திய நிவாரணப்பணி நிறுவனத்தினர் கடந்த செவ்வாய்க்கிழமை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் கையளித்ததுடன், தமிழர் புனர் வாழ்வுக்கழகத்துடன் இணைந்து அப்பொதிகளை அந்தந்தக் குடும்பங்களுக்கு வழங்கியுமுள்ளனர். தாங்கள் மாவட்ட ரீதியாகப் பொருட்களை மக்களுக்கு விநியோகித்ததாகவும் அதன்போது அவதானிக்கையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரின் சேவைகளே இங்கு மிகவும் திருப்திகரமாகவும் நிறைவாகவும் உள்ளது. ஆகவே தான் தமிழர் புனர்வாழ்வுக் கத்தினூடாக இக் குடும்பங்களிற்குரிய பொதிகளைத் தாங்கள் வழங்க முன்வந்ததாகவும் மத்திய நிவாரணப் பணியினர் தெரிவித்தனர். (கு)



புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு வீதியில் பாற்பண்ணைக்கு அருகாக சென்று இரணைப்பாலை வீதியை சந்திக்கும் கிளை வீதியில் பொருத்தமற்ற வகையில் அமைக்கப்பட்டு வந்த நீரோடியின் கட்டுமான வேலை மக்களின் அழுத்தங்களை அடுத்து இடைநிறுத்தப் பட்டுள்ளது இடைநிறுத்தப்பட்டுள்ள இந்த நீரோடியின் குறை வேலையை படத்தில் காணலாம்.



கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவை சங்கத்தினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் ஐந்து பாடசாலைகளுக்கு நேற்று முன்தினம் முதலுதவிப்பெட்டிகள் வழங்கி வைக்கப்பட்டது. முதலுதவிப்பெட்டிகளை பெற்றுக் கொண்ட மாணவர்களையும், ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். (படம்.சோதி)

## 120 இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கல்

(செட்டிகுளம்)

உலக கனேடிய பல்கலைக்கழகத்தின் நிதியுதவியின் கீழ் கொம்டெக் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் பயிற்சி பெற்ற 120 இளைஞர் யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கடந்த ஒன்பது மாதகால பயிற்சியை முடித்துள்ள மேற்படி இளைஞர் யுவதிகள் தமது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்திக் கொள்ளும் வகையிலும் தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்ளும் வகையிலும் ஒவ்வொருவருக்கும் சான்றிதழும், 6000 ரூபா பெறுமதியான தொழில் சார் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பெற்ற 120 பேரும் நீர்க் குழாய் பொருத்தல், மேசன்வேலை, தச்சுவேலை, மின் இணைப்பு போன்ற தொழில்களில் [illegible]வார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (21)

## கண்ணிவெடியகற்ற புதிய இயந்திரம்

(செட்டிகுளம்)

வவுனியாவில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு அதிநவீன உபகரணம் ஒன்றினை இந்திய நிறுவனமான சர்வத்திரா தருவித்துள்ளது. நேற்று முன்தினம் முதல் இந்த நவீன உபகரணம் பாவிக்கப்படு வதாக அந்த நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த உபகரணத்தற்கு அர்ச்சுனா என்று பெயரிடப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக மேற்படி நிறுவனம் வெடிபொருட்களை அகற்றி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான ஆவணம் நேற்று முன்தினம் அரச செயலகத்தில் வவுனியா அரச அதிபரிடம் கொடுக்கப்பட்டது.

## வேதாகம புதிர்ப்போட்டி

(வவுனியா)

வவுனியா கிறிஸ்தவ வாலிபர் சங்கம் அகில இலங்கை வேதாகமப் புதிர்ப்போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

இவ்வேதாகமப் புதிர்ப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் வவுனியா மாவட்ட பாடசாலை மாணவர் அணிகளை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு வவுனியா கிறிஸ்தவ வாலிபர் சங்கம் கோரியுள்ளது. (10)

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகருக்கு வெளியே இனந்தெரியாத நபர்கள் வீடொன்றினுள் நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த புதன் கிழமை மட்டக்களப்பு இருதயபுரத்தில் நடைபெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஜோசெப் கிறிஸ்ரி என்பவரே படுகாய மடைந்தவராவார்.

கட்டடப்பொருள் விற்பனையாளரான இவர் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# மொசூலில் மரணச் சடங்கில் தற்கொலைத் தாக்குதல்

# 47 பேர் உடல் சிதறிப்பலி; 90 பேர் காயம்!

(பாக்தாத்)


**ஈராக்கின் மொசூல் நகரில் மரணச்சடங்கு நிகழ்வில் இடம் பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் 47 பேர் உடல் சிதறிப் பலியாகினர். மேலும் 90இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடை பெற்றது.**

ஈராக்கில் தீவிரவாதிகள் தொடர்ந்து அமெரிக்க படையினருக்கு எதிராகவும், ஈராக்



பொலிசாருக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இந்த நிலையில் ஈராக்கில் ஷியா முஸ்லிம்களுக்கும் சன்னி முஸ்லிம் களுக்கும் குர்திஷ் இனத்தவர்களுக்கு மிடையே அடிக்கடி மோதல் நடைபெற்று வருகிறது.

மொசூல் நகரில் உள்ள ஒரு மசூதி அருகே ஷியா இனத்தவர் ஒருவரின் இறுதிச்சடங்கு நடந்து கொண்டிருந்தது. ஏராளமானவர்கள் கூடி நின்று இறுதி அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தனர். அப்போது கூட்டத்துக்குள் திடீர் என்று நுழைந்த ஒருவர் தனது இடுப்பில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார். சன்னி இனத்தை சேர்ந்த அந்த தற்கொலை படை தீவிரவாதி நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 47 பேர் உடல் சிதறி பலியானார்கள். 90இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். அந்த மசூதியின் அருகே உள்ள கட்டடங்களும் சேதமடைந்தன. அந்த பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சி



அளித்தன. இது இவ்வாறிருக்க ஈராக்கிய புதிய மந்திரிசபை அடுத்தவாரம் பதவி ஏற்கவி ருக்கிறது.

## புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக பிரான்சில் போராட்டம்

(பரிஸ்)

புதிய பொருளாதாரக் கொள்கையின் படி வேலை நேரத்தை 35 மணி நேரத்திலிருந்து அதிகப்படுத்தும் அரசின் முடிவை எதிர்த்து பிரான்சில் நேற்று முன்தினம் ஒட்டு மொத்தப் போராட்டம் நடந்தது. விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

பிரான்ஸ் நாட்டில் ஊழியர்களின் வார வேலை நாட்களின் நேரம் 35 மணி நேரமாக நிா்ணயிக்கப்பட்டுள்ளது. புதிய பொருளாதாரக் கொள்கையின் படி வேலை நேரத்தை அதி கரிக்கவும் பணிநியமனத்தைக் குறைக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. அரசின் இந்தத் திட்டங்களைக் கண்டித்துப் பல்வேறு துறை ஊழியர்கள் ஒருநாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் யாரும் வரவில்லை. விமானம் மற்றும் ரயில் போக்கு வரத்து மோசமாகப் பாதிக்கப்பட்டது.

பரிஸ் நகரில் வரும் 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடக்கவுள்ளன. இதற்கான பணிகளை ஆய்வு செய்ய சர்வதேச ஒலிம்பிக் ஆய்வாளர்கள் பரிஸ் நகருக்கு வந்துள்ளனர். போக்குவரத்து ஊழியர்களின் வேலை நிறுத் தத்தால் இந்த ஒலிம்பிக் குழுவினர் உரிய இடங்களுக்குச் செல்ல முடியாமல் அவதிப்பட் டனர்.




பிலிப்பைன்ஸ் மணிலாவில் அமெரிக்கத் தூதரகத்திற்கு அண்மையாக அமெரிக்கப்படையினர் ஈராக்கில் நிலைகொண்டிருப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தும் பிலிப்பைன்ஸ் முஸ்லிம்பெண்கள்.

## லெபனானிலுள்ள சிரியப் படையினர் முழுமையாக விலக்கப்படவேண்டும்

### -ஐ.நா.பொதுச் செயலர் வலியுறுத்து

லெபனானில் இருந்து படைகளை சிரியா முழுமையாக விலக்கிக்கொள்ள வேண்டும். என்று ஐ.நா. பொதுச்செயலாளர் கொபி அனான் வலியுறுத்தியுள்ளார்.

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் நடைபெறும் பயங்கரவாதத்துக்கு எதி ரான சர்வதேச மாநாட்டில் பங்கேற்க வந்த அவர் அங்கு நிருபர்களிடம் கூறியதாவது.


ஐ.நா.சார்பில் அனுப்பப்படும் தூதர் லெபனான், சிரியா ஆகிய இரு நாடுகளுக்கும் செல்வார். முதல் கட்ட மாக லெபனானில் உள்ள 14,000 சிரிய படை வீரர்கள், எல்லை அருகே உள்ள கிழக்குபேகா பள்ளத் தாக்கு பகுதிக்கு திருப்பி அழைத்துச் கொள்ளப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 83 பேரைக் கொன்ற முதலை பிடிபட்டது!

(கம்பாலா)

உகாண்டாவின் தலைநகர் கம் பாலா அருகே புவாமாவில் ஒரு ஏரி உள்ளது. ஏராளமான மீனவர்கள் இதில் மீன் பிடித்து பிழைப்பு நடத்தி வருகிறார்கள். சுற்றுலா பயணிகளும் இங்கு வந்து போகிறார்கள்.

இந்த ஏரிப்பகுதியில் ஒரு



முதலை பல ஆண்டுகளாக அட்ட காசம் செய்து வந்தது. கடந்த 20 ஆண்டுகளில் இந்த முதலை 83 மீன வர்கள் மற்றும் சுற்றுலா பயணி களை கொன்று தின்று விட்டது. இந்த முதலையைப் பிடிக்க வனத் துறை அதிகாரிகளும் எவ்வளவோ முயற்சி செய்தும் அது பிடிபடாமல் நழுவி வந்தது. 20 ஆண்டு தேடுதல் வேட்டைக்குப்பிறகு இப்போது அந்த முதலை வனவிலங்கு அதிகாரிகளி டம் உயிருடன் பிடிபட்டது. அந்த முதலை 16 அடி நீளம் இருக்கிறது. அதன் எடை ஒருதொன். அந்த ராட்சத முதலைக்கு 60 வயது ஆகி றது. அதை கயிற்றால் கட்டி படகில் எடுத்துவர ஊழியர்கள் மூன்று நாட் கள் போராடினார்கள்.

## அமெரிக்க படையினர் மீதான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படும்

### -தலிபான்கள் எச்சரிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான் தீவிரவாதிகள் அமெரிக்கத் தலைமை யிலான கூட்டுப் படையினரின் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்துவோம் என அறிவித்துள்ளனர்.

சில நாட்களுக்கு முன்பு காபூலில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பு ஒன் றில் அமெரிக்க செய்தித் தொடர்பாளர் கலந்துகொண்டார். அதில் அவர் தலி பான்கள் முற்றிலுமாக அடக்கப்பட்டு விட்டதாகவும் இனிமேல் அவர்க ளுக்கு தாக்குதல்களில் ஈடுபடுமள வுக்கு சக்தி கிடையாது என்றும் கூறி யிருந்தார்.

இதையடுத்து தலிபான்களின் தலைவர் உபிதுல்லா ஓர் அறிக்கை வெளியிட்டார்.அதன் விபரங்களைப் பற்றி செய்தித் தொடர்பாளர் அப்துல் லத்தீப் ஹகிமி தெரிவித்ததாவது;

அமெரிக்கப் படையினருக்கு நாங் கள் இன்னும் முழுப் பலத்தோடுதான் உள்ளோம் என்பதை நிரூபிப்பதற்காக காபூலின் மையப்பகுதியில் தாக்குதல் களை நடத்துவோம். குளிர்காலம் முடிந்தவுடன் எங்களின் தீவிர தாக்கு தலை அமெரிக்கப் படையினர் உண ருவார்கள் என்று கூறியுள்ளார்.



பிலிப்பைன்சில் கைப்பற்றப்பட்ட 10மில்லியன் பேசோ பெறுமதியான சீடிக்கள் புல்டோசர் மூலம் அழிக்கப்படுகின்றன.

## ஏப்பிரலில் சார்க் மாநாடு நடைபெறலாம் பாகிஸ்தான் சக நாடுகளுடன் ஆலோசனை

(இஸ்லாமாபாத்)

பங்களாதேஷில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டிற்குப் புதிய திகதியை முடிவு செய்ய பாகிஸ்தான் முடிவு எடுத்துள்ளது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற இருந்த சார்க் மாநாடு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. சார்க் அமைப்பின் தற்போதைய தலைமை பாகிஸ்தானிடம் உள்ளது. தற்போது நடைபெற உள்ள 13 ஆவது சார்க் மாநாட்டை ஏப்ரல் மாத மத்தியில் நடத்துவதற்குப் பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. புதிய திகதியை முடிவு செய்யும் முன்பு இந்தியா மற்ற சார்க் நாடுகளின் அனுமதியையும் பாகிஸ்தான் எதிர்பார்த்துள்ளது. மேலும் திகதியை முடிவு செய்யும் முன்பு டாக்காவிடமும் கலந்து ஆலோசிக்க பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது.

மற்ற நாடுகளிலிருந்து அனுமதி வந்த பிறகு ஒரு வாரத்திற்குள் உறுதியான திகதியை பாகிஸ்தான் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக சார்க் மாநாடு இரண்டு முறை தள்ளி வைக்கப்பட்டது. முதலாவதாக சுனாமிப் பாதிப்பால் மாநாடு தள்ளி வைக்கப்பட்டது. இரண்டாவது முறையாக நேபாளத்தில் ஆட்சிக்கவிழ்ப்பு ஏற்பட்டதையடுத்து மீண்டும் மாநாடு தள்ளி வைக்கப்பட்டது.

ஏப்ரல் மத்தியில் மாநாடு நடத்தும் பாகிஸ்தானின் முடிவிற்கு இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் சாதகமான முடிவை தெரிவித்ததாக கூறப்படுகின்றது.

## சீனாவில் 54200 டாக்டர்களுக்குத் தடை!

கடந்த 2004இல் எட்டு மாதங்களில் மட்டும் முறையான அனுமதி பெறாத 54200 டாக்டர்களுக்கு பணியை மேற்கொள்ள சீனா தடைவிதித்துள்ளது. கடந்த ஆண்டில் சட்டவிரோதமாக மருத்தவ சேவையில் ஈடுபட்டதாக 77033 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 18959 மருத்துவ மனைகளில் தகுதியில்லாத மருத்து வப்பணியாளர்கள் பணியாற்றியது கண்டறியப்பட்டது. அதேபோல 3477 மருத்துவ சேவை நிறுவனங்களின் உரிமங்கள் ரத்துச்செய்யப்பட்டு ரூபா.26 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## ஈரானுக்கு அணு இரகசியங்கள் விற்றதை பாகிஸ்தான் அரசு ஏற்பு

ஈரானுக்கு அணுகுண்டு இரகசியத்தை விற்றதாக முதன் முறையாக பாகிஸ்தான் அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

பாகிஸ்தான் விஞ்ஞானி அப்புல் குவாதிர்கான் ஈரான் நாட்டிற்கு அணுரகசியங்களை விற்றிருப்பதாக அமெரிக்க புலனாய்வுத்துறை கடந்த வருடம் பரபரப்பு தகவல் வெளியிட் டது. இதை பாகிஸ்தான் அரசு மறுத்து வந்தது. இந்நிலையில் முதன்முறை யாக பாகிஸ்தான் அரசு இந்த உண் மையை ஒப்புக்கொண்டிருக்கிறது. இது குறித்து பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் ஷேக் ரஷித் அகமது நேற்றுமுன்தினம் நிருபர்க ளிடம் கூறுகையில், பாகிஸ்தான் விஞ்ஞானி அப்துல் குவாதிர்கான் ஈரான் நாட்டிற்கு அணு ரகசியங்களை வற்று உள்ளார். பாகிஸ்தானில் அணு ஆயுத சோதனைக்கு அனுமதிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். விஞ் ஞானி குவாதீர்கானை விசாரணை நடத்த விரும்புகிறவர்கள் எங்களிடம் சொன்னால் நாங்கள் அவரிடம் விசா ரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்க ளுக்கு தகவல் தெரிவிப்போம் என்று கூறினார்.

# பெண்ணின் மூளை

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு மனித உடல் அங்கமான மூளை பிரதான காரணமாக அமைகின்றது. ஒரு மனிதனின் முழுச் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தல், ஒருங்கிணைத்தல் போன்ற செயற்பாடுகள் மூளையினாலும் அதனை சார்ந்த நரம்புகளினாலுமே மேற் கொள்ளப்படுகின்றது. இப்பெறுமதி மிக்க மூளை மனிதனில் மிக வன்மையான தலையோட்டு என்பினாலேயே பாதுகாக்கப்பட்டுள்ளது.

மூளையானது அமைப்பிலே பொதுவாக எல்லோருக்கும் ஒரே மாதிரிதான் காணப்பட்டாலும் அதன் உணர்திறன், செயற்படும் விதம் என்பன ஒருவருக்கொருவர் வேறுபட்டே இருக்கும். இவ்வேறுபாட்டினை ஒருவருடைய பழக்க வழக்கங்கள், அவர்களின் நடத்தைகள், ஒருவரின் அறிவுமட்டம், பண்பாடு போன்றவற்றை உற்று நோக்குவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். இவ்வேறுபாடுகளிற்கு சமூக கலாசாரங்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பிரதான காரணங்களாக அமைந்தாலும் இவ்வேறுபாடுகளுக்கு ஆண், பெண் பால் வித்தியாசமும் காரணமாக அமைகிறது. என விஞ்ஞான ஆய் வுகளிலிருந் து தெரிய வந்துள்ளது.

ஆண்களினதும், பெண்களினதும் மூளை பெரும்பாலும் ஒன்றையொன்று ஒத்ததாகவே காணப்படும். ஆனால் மூளையின் அளவும், மூளை அமைந்துள்ள விதம், செயற்படும் விதம் என்பன ஒன்றுக்கொன்று வேறுபட்டே காணப் படும் பொதுவாக பெண்ணினது மூளையின் அளவு, ஆணின் மூளை யின் அளவினை விட ஏறத்தாழ 10-15 % ஆல் சிறியதாகும். ஆனாலும் பேச்சு, புரிந்துகொள்ளும் திறன் என்பன பெண்ணில் அதிகமாக காணக்கூடியதாகவிருக்கும்.

பெண்கள் அதிகமாக மூளையை உபயோகிக்கக் கூடியவர்களாக இருப்பர். பெண்களின் மூளையில் கலங்கள் செயற்படும் வீதம் அதிகமாகும் என பிரபல மூளை பற்றிய நிபுணரான மார்க் ஜோர்ஜ் தெரிவிக்கிறார். ஓர் ஆணின் மனம் செயற்படுமிடத்து நரம்புக் கலங்கள் மூளையின் குறிப்பிட்ட பகுதிகளிலே மாத்திரம் இயங்குகிறது. ஆனால் பெண்ணின் மூளையில் குறிப்பிட்ட பகுதிகளில் மாத்திரமல்லாமல் மூளையின் அதிகமான இடங்களில் நரம்புக் கலங்கள் இயங்குவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணமாக அமைவது மூளையின் 'கோர்பஸ் கலேசம் ' எனும் பகுதி செயற்படும் விதமாகும். . இது மூளையின் நடுப்பகுதி ஊடாக கீழ் நோக்கிச் செல்லக்கூடிய ஒரு நரம்புக்கட்டு ஆகும். இது பெண்களில் தடிப்புக் கூடியதாக இருக்கும். இதனால் உணர்வுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய மூளையின் வலப்பக்கத்திற்கும் காரண காரியங்களை கட்டுப்படுத்தும் மூளையின் இடப்பக்கத்திற்குமிடையில் ஒரு தொடர்பு ஏற்படும்.இதன் மூலம் மனநிலை வலிமை பெறுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

பெண்களின் மூளை அதிகளவு கவலைப்படக்கூடிய விடங்களுக்கு அடிமைப்படக் கூடியதாகும். கவலைப் படக் கூடிய நிகழ்ச்சிகளை நினைவு படுத்தும்பொழுது ஆணினதும், பெண்ணினதும் மூளையில் ஏற்படும் மாற்றங்களை பேராசிரியர் மார்க்ஸ் ஜோர்ஜ் அவதானித்தார். இவ்வாராய்வுக்குட்படுத்திய இரு பிரிவினரும் கவலைதரும் விடயங்களுக்கு இரு வேறுவிதமாக முகம் கொடுப்பதை அவர் கண்டறிந்தார். ஒரே மாதிரியான மனதில் தாக்கம் செலுத்தக் கூடிய நிகழ்வுகளையோ, கருத்துக்களையோ நினைவு படுத்தும்பொழுது ஆண்களைவிட பெண்களின் மூளைக் கலங்கள் அதிகமாக இயங்குவதாக அவ்வாய்விலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.இதன் காரணமாக பெண்கள் இலகுவில் நோய்வாய்ப் படக்கூடியவர்களாக இருப்பர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பெண்கள விரைவாகப் பேசக்கூடிய ஆற்றலையும் அதிகமாகக் கொண்டிருப்பார்கள். ஒரு சொல்லிலிருந்து ஆரம்பிக்கும் பல சொற்களை, ஒரே கருத்தில் அமையும் பல சொற்களையோ அடிக் கடி உச்சரிக்கக் கூடிய திறமையி னைப் பெற்றிருப்பர். பெண்ணின் மூளையின் வல,இடப்பக்கங்களின் நரம்புக்கலங்கள் அதிகளவு செயற்படுவதன் காரணமாகவே இவ்வாறான தன்மை காணப்படுவதாக ஜேல் பல்கலைக்கழக நரம்பியல் நிபுணர்களான சேலி மற்றும் பெனற் சேவிற்ஸ் தெரிவிக்கின்றனர். மேலும் பெண்கள் விரைவாக எழுதும் ஆற்றலையும் நிறங்களையும். உருவமைப்புக்களையும் இலகுவில் இனங் காணக்கூடிய வல்லமையையும் பெற்றிருப்பர். ஆண்களின் மூளையின் இடப் பக்கக் கலங்கள் மாத்திரமே இவற்றிற்குத்தொழிற்படுவதால் ஆண்களுக்கு இவ்வாறான ஆற்றல்கள் குறைவாகவே காணப்படும். பெண்கள் மூளையின் இருபக்கங்களையும் உபயோக்கிப்பதன் காரணமாக திடீர் விபத்துக்களின் போதும், ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் மூளையில் ஏற்படும்காயங்களும், இலகுவில் குணமடையக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

பெண்களின் ஞாபகசக்தியும் ஆண்களைவிட அதிகமாகும். பெண்களின் ஞாபகசக்தியானது எல்லா வயது மட்டத்திலும் ஆண்களைவிட அதிகமாகுமென சுமார் 50,000 பேரிடம் ஆய்வினை மேற்கொண்ட மருத்துவர் தோமஸ்குருக் தெரிவித்திருக்கிறார். மேலும் முகங்களை இனங்காணவும். பெயர்ப் பட்டியல்களை நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய ஆற்றலும் பெண்களுக்கு அதிகமாகும் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். பெரும் பாலானவர்களுள்குத் தம் மனநிலை பாதித்தவிடயங்கள் அதிகமாக நினைவில் இருக்கிறது. இவ்வாறான ஞாபகங்களிற்கு மூளையின் வலப் பக்கமே பொறுப்பாகவுள்ளது. பெண்கள் அதிகமாக மூளையின் வலப்பக்கத்தை உபயோக்கிப் பதால் பெண்களுக்கு அதிக ஞாபகம் வைக்கமுடிகிறது எனவும் அறியப்பட்டுள்ளது.

மேலும் வயது செல்லச்செல்ல ஞாபகசக்தி குறைந்து செல்வது ஆண்களைவிடப் பெண்களுக்குக் குறைவாகும். வயது அதிகரித்துக் கொண்டு செல்ல ஆண்களின் மூளையின் இயக்கம் குறைவடைகின்றது. இதனால்தான். தொடர்ந்து ஒரு விடயத்தில் கவனத்தைச் செலுத்த முடியாமை, ஞாபகசக்தி குறைதல் அதிகமன அழுத்தத்திற்கு உட்படல் என்பன ஏற்படுகின்றது. ஆனாலும் பெண்களில் இந்த நிலைமைகள் ஏற்படுவது குறைவாகும் எனவும் அறியப்பட்டுள்ளது. பெண்களின் மூளை, ஆண்களின் மூளையை விட அதிக காலம் இயங்கினாலும், விசேட இயல்புகளைக் கொண்டிருந்தாலும் மூளையில் ஏற்படுகின்ற நோய்கள் பெண்களுக்கு அதிகமாகும் எனவும் அறியப் பட்டுள்ளது. எது எப்படியாயினும் மூளையானது ஆண்களிலும், பெண்களிலும் செய்வது ஒரே வேலையையாகும். ஆனால் அவற்றைச் செய்யும் முறைதான் வேறுபட்டிருக்கும் என்கிறார் பேராசிரியர் ராஜேல்கர்.


## பாடசாலையில் மாணவர்களுக்கு கல்வி புகட்டும் "றோபோ"



தற்போது மனித நடவடிக்கைகள் அனேக மானவற்றில் (றோ போ) இயந் திர மனிதனின் சேவை பெறப்படுகின்றது. சத்திர சிகிச்சையின் போதான சேவை இயந்திரங்கள் பழுதுபார்த்தல், காரியாலயங்கள் வரவேற்புப் பணி என பல வகைப் பணிகளை இந்த றோபோக்கள் ஆற்றுகின்றன.


தற்போது பாடசாலைகளில் கல்வி புகட்டுவதற்கு ஏற்றவாறான றோபோவை ஜப்பானிய நிறுவனம் அறி முகப்படுத்திள்ளது. இதனால் மாணவர்கள் ஆர்வத்துடன் பயில முடியும் என்பது நிறுவனத்தின் கருத்தாகும்.

ஜப்பானிய. இரசாயனப் பொருள் உற்பத்தி நிறு வனமான டொரே புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள இரத்தப் பரிசோதனைக்கு பயன்படுத்தப்படும் சிறு தகடு, பிளாஸ்டிக்கினால் ஆன இத்தகட்டில் ஒரு துளி இரத்தம் பரிசோதனை செய்யும் போது மனித உடலிலுள்ள அத்தனை நோய்களுக்குமான காரணிகளையும் இனங்காட்டும் தன்மையுடையது எனக் கூறப்படுகிறது. நூற்றுக் கணக்கான கண்ணாடி இழைகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த சமயம் இதுவும்காட்சிப் பொருளாக வைக்கப் பட்டிருந்தது. விரைவில் இது சந்தைக்கு வரவிருப் பதாக நிறுவனம் தெரிவிக்கிறது.



## மிகச்சிறிய இலகு வீடியோக் கமரா

ஜப்பான் சங்யோ எலக்ரிக் நிறுவனத்தின் டிஜிற்றல் வீடியோ.க் கமராவான சக்ரிசீறிஸ் "DM X 65" இனை ரோக்கியோ தலைமைச் செயலகத்தில் வைத்து விளம்பரப் பெண்ணொருவர் காட்சிப்படுத்து கின்றார். இக் கம்பனி உலகத்திலேயே மிகச்சிறிய இலகு வீடியோக் கமராவை எதிர் வரும் 29 ஆம் திகதி வெளியீடவுள்ளது. இதன் பெறுமதி 72000 ஜென்களாகும்.



## அதிகநேரம் தூங்கும் ஐரோப்பியர்


ஐரோப்பியர்கள் தான் அதிக நேரம் தூங்குகிறார்கள். ஆசிய நாட்டினர் நள்ளிரவு வரை விழித்து இருக்கிறார்கள். காலையில் சீக்கிரம் விழித்துக்கொண்டு விடுகிறார்கள்.

இது உலக அளவில் நடத்தப் பட்ட ஒரு ஆய்வு மூலம் தெரிய வந்து உள்ளது. ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய மூன்று கண்டங்களில் உள்ள 28 நாடுகளில்வசிக்கும் 14 ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில், ஆசியாவில் வசிப்பவர்களில் 40 சதவீதம் பேர் நள்ளிரவுக்குப் பிறகே தூங்கப்போவது தெரியவந்துள்ளது.

அமெரிக்காவில் 32 சதவீதம் பேரும் ஐரோப்பாவில் 30 சதவீதம் பேரும் நள்ளிரவுக்குப் பிறகு தூங்கப் போகிறார்கள்.

அதேபோல காலையில் சீக்கிரம் கண்விழிப்பதும் ஆசிய நாட்டினர் தான்.

ஜப்பானியர்கள் தான் குறைந்த நேரம் தூங்குகிறார்கள். 41 சதவீதம் ஜப்பானியர்கள் 6 மனி நேரமும் அதற்குக் குறைவாகவும் தூங்குகிறார்கள்.



போத்தில் ஒன்றில் அடைக்கப்பட்ட காபனீரொட்சைட்டுடனும் மின்சாரத்தின் உதவியுடன் சமதரையில் நடந்து செல்லக்கூடிய இயந்திர மனிதன் இதுவாகும். இதனை நெதர்லாந்தின் முன்னாள் ஆய்வாளரான விஸி என்பவர் தயாரித்துள்ளார். இது டினைஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## ஜப்பானில் "றோபோ" கண்காட்சி

ஜப்பானில் உள்ள நகோயாப் பகுதியில் வரும் 25 ஆம் திகதி 'றோபோ' கண்காட்சி தொடங்குகிறது. வரும் செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி வரை இந்தக்கண்காட்சி நடக்கவுள்ளது. ஒன்றரை கோடி பேர் இந்தக்காட்சிக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பானிய 'டிஎம்சுக' நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த றோபோ விமான நிலையம் , ரயில் நிலையம் , சாலைகளில் சந்தேகத்திற்கிடமான பொருட்களைக் கண்டெடுக்கும் திறன்வாய்ந்தது. ஒன்றரை மீற்றர் உயரமுள்ள "மியுஜிரோ" என பெயரிடப்பட்டுள்ள இந்த றோபோ இரவு நேரத்தில் ரோந்து சுற்றி காவல் காக்கும் பணியிலும் ஈடுபடுமாம். றோபோ கண்காட்சியில் "மியுஜிரோ" வும் இடம் பெறவுள்ளது.

எங்களுக்குரிய வழமையான வேலைகளில் முனைப்புடன் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுது கடல் அனர்த்தம் ஏற்பட்டு முல்லைத்தீவில் அழிவு க்குட்பட்டிருப்பதாக தகவல் கிடைத்தது. அதை நாங்கள் பெரிதுபடுத்தா மல் எங்கள் வேலைகளுககுள் மூழ்கிப் போயிருந்தோம்.

இப்படியிருக்க எங்களது தளபதி ஜெயம் அண்ணா குறிப்பிட்ட போராளிளைக் கூட்டிக்கொண்டு மீட்பு வேலைக்கு அவசரமாக வருமாறு தகவல் அனுப்பியிருந்தார்.

அந்தத்தகவலை அடுத்து ஒரு தொகுதி போராளிகள் இரவிரவாக வெளிக்கிட்டு விடிய நேரத்தோடையே முல்லைத்தீவுக்கு வந்து சேந்திட்டம்.

விடிய நேரத்துக்கே வந்ததால வட்டு வாகல்பாலத்தால் போய்ப் பாப்பம் எண்டு

கள், சிறிய பனைவடலிகள் எல்லாவற்றுக்குள்ளேயும் உடல்கள் போய் செருகிய படியிருந்தது. அப்படி இருந்த உடல்கள் அனைத்துமே ஆடைகள் இல்லாமல் அலங்கோலமான நிலையில் இருந்தது.

வடலிகளுக்குள் செருகியபடி இருந்த சடலங்கள் சிலவற்றை மீட்டெடுக்க முடியாமல் இருந்தது. சடலங்களை இழுத்துக்கூட எடுக்க முடியாமல் இருந்தது.

தண்ணீரில் அடிபட்டு வேகமாக வந்த உடல்கள் வந்த வேகத்திலேயே பனை வடலிகளுக்கிடையில் செருகுப்பட்டுப் போயிருந்தன. அவ்வாறு செருகிய நிலையில் அவை ஊதிப் பெருக்க ஆரம்பித்ததால் அந்த இடத்தில் இருந்து அகற்ற முடியாமல் பொய்விட்டது. அதனால் சில உடல்களை அப்படியே வைத்து தகனம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

எடுத்துப் பார்த்தபோது அதற்குள் சின்னப் பிள்ளைகளின் உடல்கள் இருந்தன. ஆங்காங்கே இறந்து கிடந்த சிறுவர்களின் உடல்களை தூக்குவதற்கு இலகுவாக அந்தக்கூடைகளில் வைத்துக்கொண்டு வந்திருக்க வேண்டும். ஏணையில் படுத்து தாயின் தாலாட்டைக் கேட்டு உறங்கவேண்டிய குழந்தைகள் கறிவாங்குகின்ற கூடையில் ஊமையாய் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

இப்படியான மனதை நெருகும் சம்பவத்தை நான் ஒருகாலமும் கண்டதேயில்லை. இந்தக் காட்சியைப் பார்த்த அனைவரும் ஒருதரம் திகைத்துப்போய் நின்றோம்.

சிறுவர்களின் உடல்கள் பெரும் ஓட்டைகளும் கிழந்த தசைகளாகவும் மூட்டுக்கழன்று போயும் தான் இருந்தன. முல்லைத்தீவு முழு

டவதாய் இல்லை. இரவு பத்து மணியாகி விட்டது. நானூறுக்கும் அதிகமான உடல்களை ஏத்தி அனுப்பியிருப்போம். அந்தளவுடன் அன்றைய வேலைகளை நிறைவு செய்துவிட்டோம்.

அடுத்தநாள் மீண்டும் மீட்பு நடவடிக்கைக்காகச் சென்று கொண்டிருந்த பொழுது தவறவிடப்பட்ட தங்கள் உறவுகளைத் தேடிப் பார்ப்பதற்காக மக்கள் கூட்டம் முல்லைத் தீவை நோக்கி வந்துகொண்டிருந்தன.

நாங்களும் அடுத்தநாள் முல்லைத்தீவைச் சென்றடைந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். வாகனங்கள் (டிப்பர்) ஒன்று பனைமரத்துடன் நிமிர்த்தி சாத்திவிட்டமாதிரி இருந்தது.மீன்பிடிப் படகுகள் எல்லாம் உருமாறிப்போய் பிழந்தபடி இருந்தது. சிலமரங்களின் மேல் வலை கள், மீன்பிடி உபகரணங்கள், வீட்டுச்சாமான்கள் எல்லாமே தொங்கிக் கொண்டிருந்தன.

தமது உறவுகளைத்தேடிக் கொண்டிருந்த மக்கள் அவர்களின் உறவுகளின் உடல்களை இனங்கண்டு அதன் முன் இருந்து அழுது கொண்டிருந்தார்கள். இப்படிப் பல சம்பவங்கள் நடந்தது.

நாங்கள் உடல்களைத் தேடிக் கண்டுபிடிக்கின்ற பணியில் முழுமையாக ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுது ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு ஐயாவும், அவரது மகனாக இருக்கவேண்டும். இருவரும் இடிந்த வீடு ஒன்றின் முன்னால் நிறைந்திருந்த கஞ்சல் குப்பைகளைப் பார்த்தவாறு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர்.

இவர்களின் பார்வை எதையோ தொடர்ச்சியாகப்



**"முல்லைத்தீவு தரைமட்டமாகி பெருமளவானவர்கள் செத்துப் போச்சினம். அதால மீட்பு வேலைகளுக்கு போராளிகளைக் கூட்டிக்கொண்டு உடன வாங்கோ" எண்டு எங்கட தளபதி ஜெயம் அண்ணா சொன்னார். அதை அடுத்து இரவோடிரவாக முல்லைத்தீவுக்கு வந்துவிட்டோம். மீட்பு வேலைகளில் நாங்கள் சந்தித்த ஒவ்வொரு சம்பவமும் கொடுமையானது. மனதை ஆழமாக ஊடுருவித் தாக்கக்கூடியதாக இருந்தது. அந்தளவு கொடுமையான நிகழ்வைக் கணப்பொழுதில் சுனாமிசெய்துவிட்டுப் போய்விட்டது. ஒவ்வொரு பற்றைக்குள்ளும்,கட்டட இடிபாடுகளுக்குள்ளும்,தண்ணி தேங்கி நின்ற இடங்களுக்குள்ளும் இருந்து உடல்களை எடுக்கின்ற பொழுது இதுதான் கடைசி உடலாக இருக்காதா?இனி எந்த உடல்களும் இருக்கக் கூடாது என்கின்ற துயர ஏக்கம் எங்கள் மனங்களில் நிறைந்திருந்தது. அவ்வாறு சுனாமியின் கொடுமையில் சிக்கிச் சிதைந்த முல்லைத்தீவில் நான்கு நாட்களாகத் தொடர்ந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த போராளி அசோக் எங்களுடன் பகிர்ந்துகொண்டார். அவரின் நெஞ்சில் பதிந்த கொடுமையான சம்பவங்கள் உங்களின் பார்வைக்காக இந்தப்பகுதியில்**

# ஒவ்வொரு உடலையும் எடுக்கும்போது இது கடைசியாக இருக்காதா என்று ஏங்கினோம்

பாலத்தடிக்குப் போய்ச்சேர்ந்தம்.

நாங்கள் போய் இறங்க பத்துப் பதினைந்து பேர் ஓரிடத்தில குவிஞ்சு நிண்டு எதையோ எடுத்துக்கொண்டிருந்தினம். என்ன சம்பவம் எண்டுறதைப்பாக்கிறதுக்காக நாங்களும் அங்க போனம்.

## பகுதி-39


போய்ப்பார்த்தால் இரண்டு மரங்களுக்கிடையில சிக்குப்பட்ட நிலையில் கஞ்சல்கள் எல்லாம் மூடிப்போன நிலையில ஒரு அம்மாவின்ரையும்,அப்பான்ரையும் பொடி கிடந்தது. அந்தச் சடலங்கள் இரண்டும் உருக்குலையேல்ல ஆனால் அலங்கோல மான நிலையிலிருந்தது. நாங்கள் முல்லைத்தீவில் கண்ட முதலாவது உடல் இதுதான். அந்த இடத்தில் கனபேர் நிண்டதால நாங்கள் அதில சின்ன உதவி செய்துபோட்டு முல்லைத்தீவுக்குப் போக வெளிக்கிட்டுட்டம். நகரப்பகுதிக்கு வந்த சேர்ந்தவுடன் மணிமாறன் அண்ணா தான் சடலங்களை மீட்கின்ற ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். அன்றைய தினம் மீட்கப்பட்டு வருகின்ற அனைத்து உடல்களையும் ஒழுங்குபடுத்தி வாகனங்களில் ஏற்றி அனுப்புவதுதான் எங்களது அணிக்கான வேலையாக இருந்தது.

எங்களுக்குத் தரப்பட்ட வேலையை செய்து முடித்துவிட்டு நான்கு பிரிவுகளாக எங்கள் அணியைக் புறித்து மத்திய விளையாட்டு மைதானத்துக்கு முன்னால் இருந்த வயல் பகுதிக்குள் உள்ள முழங்காலளவு தண்ணீருக்குள் மீட்பு வேலைகளைச் செய்வதற்காக அனுப்பப்பட்டோம்.

அந்தத் தண்ணிக்குள்ள இருந்த பற்றை



அந்தத் தண்ணிக்குள்ளிருந்து அன்றைய தினம் 60 சடலங்கள் வரையில் மீட்டெடுததோம். கஞ்சல்கள் எங்கு மிதக்கிறதோ அங்கெல்லாம் எங்கள் மக்களின் உடல்களும் அவற்றுடன் சேர்ந்து மிதந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு உடல் களையும் மீட்கின்ற போதும் மீட்கப்பட்டு வரு கின்ற உடல்களை ஏற்றி அனுப்புகின்ற பொழுதும் எங்கள் மனங்கள் வலித்துக்கொண்டிருந்தன .இதுதான் கடைசி உடலாக இருக்காதா? இதனுடன் முடியாதா? என்கின்ற மன ஆதங்கம் வந்துபோய்க் கொண்டிருந்தது. ஒவ்வொரு மனிதனது இறப்பிற்கும் நாங்கள் கொடுக்கின்ற மரியாதை மேலானது. அந்த மரியாதையை இந்த இடத்தில் எங்களால் கொடுக்க முடியாமல் இருந்தது. எங்கு பார்த்தாலும் சடலங்கள் எதை எப்படிச் செய்வது என்பதே தெரியாமல் இருந்தது.



சடலங்களால் நிறைந்திருந்த முல்லைத் தீவில் நின்று கொணடு ஒவ்வொரு சடலங்களையும் கௌரவமாக அடுக்கி அடுக்கி பாத்திரமாகத் தான் ஏற்றி அனுப்பினோம்.

இப்படியாக ஒவ்வொரு சடலங்களாக ஏற்றி அனுப்பிக்கொண்டிருந்த பொழுது சடலங்கள் அடுக்கி இருந்த நிரலில் சில கூடைகளும் அடுக்கப்பட்டிந்தன. அவற்றை

வதும் கோரமாய் இருந்தது. சிறுவர்களின் உடல்களைப் பார்க்கின்ற பொழுது கோரத்திலும் கோரமாய் இருந்தது.இப்படியே கடைசிச் சடலம் கடைசி இது தான் எல்லாமே முடிகிறது என்று நினைத்து ஒவ்வொன்றாய் ஏத்திக்கொண்டிருக்க எதுவும் நிறைவடை

பார்த்தபடி இருந்தது. அவர் களின் அருகில் சென்ற போது அந்த ஐயா " தம்பியவ எனக்கு என்ர பிள்ளையின்ர பொடியை ஒருக்கால் எடுத்துத்தாங்க ராசாக்கள்.... என்னால என்ர பிள்ளையின்ர உடல் பொடியாய்ப்போய் எடுக்க ஏலாமல் இருக்குது தம்பி" என்று சொன்னார்.

"இந்தக் கோலத்தில பொடியை எடுக்க ஏலாமல் இருக்கு தம்பி". "எப்படி யெல்லாம் ஆசையால் வளர்த்த பிள்ளைய இப்படிப் பறிகுடுத்திட்டன்''. என்று புலம்பி அழுதுகொண்டிருந்தார்.

அந்த ஐயா காட்டின இடத்திற்குப்

அ.லோகீசன்

போய்ப்பார்த்தால் முட்கம்பிகளுக்குள் சிக் குப்பட்ட நிலையில் சடலம் இருந்தது. அதைப் பக்குவமாய் எடுத்து எங்கள்உழவுஇயந்திரத்தில் ஏற்றினோம். அந்த ஐயாவுக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்று தெரியாமல் இருந்தது. அந்தளவுக்கு அவர் தனது மககளின் இழப்பால் நொந்து போய் புலம்பிக் கொண் டிருந்தார். அவர் கூறிய சம்பவம் எங்களையும் ஒரு தடவை உறையவைத்து விட்டது.

அழுது கண்ணீர்வடித்தவாறே தனது மகள் எப்படி அதனுள் சிக்கினாள் என்ற சோகக் கதையை ஐயா சொல்ல ஆரம்பித்தார். அந்தக்கதையென்ன? என்பன உள்ளிட்ட தனது மீட்பு அனுபவத்தை அடுத்த பகுதியிலும் கட்டளைப்பணியகப் போராளி அசோக் பகிர்ந்துகொள்வார்.

தொடரும்...

– சுனாமி உதவி தொடர்பான –

# தேசியநடவடிக்கைச் செயலகத்தின் உறுப்பினர்களை மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகப்பணிப்பு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பெற்ற சுனாமி உதவி தொடர்பான தேசிய நடவடிக்கைச் செயலகத்தின் சகல உறுப்பினர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நேற்று முன்தினம் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கிடைக்கப்பெற்ற உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியுதவிகளை கையாளும் முறைமையைமக்களும் அறிந்து கொள்ளும் செயற்றிட்டமொன்றை உருவாக்குவதற்கான உத்தரவொன்றை அரசாங்கத்திற்குப் பிறப்பிக்குமாறு கூறி தேசமானி லலித் கொத்தலாவல சமர்ப்பித்த மனுவை விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட பின்னரே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டது.

இதில் தேசிய நடவடிக்கைச் செயலகத்தின் உறுப்பினர்கள் ,நிதி மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர்கள், திறைசேரி ஆணையாளர் உட்பட 26 பேர் பிரதிவாதிகளாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக தேசிய நடவடிக்கைச் செயலகமோ, அரசாங்கமோ கூடிய செயற்றிட்டங்களை உருவாக்கவில்லையெனவும் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல் நாகரிகமற்ற அரசு இலங்கையில் இயங்குகிறது

## ஐ.தே.கட்சி பா.உறுப்பினர் சாடல்

(கொழும்பு)

நிரந்தர அரசியற்கொள்கைகள் ஒற்றுமை, மற்றும் அரசியல் நாகரிகமற்ற ஒரு அரசு இலங்கையில் இயங்கிவருகிறதென கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ரம்புக்வெல சாடியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாட்டிலிருந்து சுனாமி நிவாரணத்திற்காக இங்கு அனுப்பிய நிவாரணங்களை பகிர்ந்தளிப்பதிலும் பெரும் இழுபறி நிலையில் அரசு உள்ளது. தற்பொழுது அரசாங்கம் எதுவும் செய்யமுடியாத நிலையில் தத்தளித்துக் கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தினால் இன்று இந் நாட்டு சனாதிபதியும் பாதுகாப்பாக இருக்கிறார்.வடக்கு- கிழக்கில் சுனாமி நிவாரணங்களை பகிர்ந்தளிப்பதில் விடுதலைப்புலிகளின் அனுசரணை இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்றார். அவர்.

# மலையக மக்களின் நிலை தொடர்பாக உலகின் கவனத்திற்கு கொண்டுவருவேன்

## -மலையக மக்கள் முன்னணித்தலைவர் சந்திரசேகரன்

பாராளுமன்ற உறுப்பினர்களின் வெளிநாட்டு விஜயத்தின் போது மலையக மக்கள் தொடர்பான உண்மை நிலவரங்களை வெளிநாட்டுத் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்போவதாக மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.இது தொடர்பாக செவ்வியளித்த முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெரியசாமி சந்திரசேகரன், மலையக மக்கள் காணி உரிமை உட்பட்ட அடிப்படை உரிமைகளை இழந்து நிற்கிறார்கள். எனவே அவர்களுக்கு அந்த உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதற்கு சர்வதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தாம் வெளிநாடுகளிடம் வலியுறுத்தவுள்ளதாகக் குறிப்பிட்டார்

இதேவேளை மலையக மக்கள் தனியான இனமாக இனம் காணப்பட்டு அவர்களின் நில உரிமை உட்பட்ட வாழ்வுரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என்ற வலியுறுத்தலையும் தாம் வெளிநாட்டுத் தலைவர்களிடம் விடுக்கப் போவதாக சந்திரசேகரன் குறிப்பிட்டுள்ளார்.

# குப்பைத் தொட்டியில் இளைஞரின் சடலம்

கொழும்பு தெமட்டக் கொடபகுதியில் குப்பைத் தொட்டி ஒன்றிலிருந்து நேற்றுமுன்தினம் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தெமட்டக்கொட பொலிஸ் பிரிவிலுள்ள குருசாமி மௌலான ஒழுங்கையில் பொதுக்கழிப்பறைக்கு முன்னாலுள்ள நகராட்சி மன்றக் குப்பைத் தொட்டிக்குள்ளிருந்து மீட்கப்பட்ட இந்தச் சடலம் சுமார் 30 வயதிற்குட்பட்டவருடையதெனவும் இதுவரை சடலம் அடையாளம் காணப்படவில்லையெனவும் தெமட்டக்கொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# திருமலை-வீரநகர், மனையாவெளி மக்களுக்கு மீன்பிடி உபகரணம் வழங்கல்

(திருகோணமலை)

திருகோணமலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீரநகர் மற்றும் மனையாவெளி பகுதிகளில் பாதிக்கப்பட்டமீனவர்களுக்கு மீன்பிடிப்படகுகள், என்ஜின்கள் மற்றும் வலைகள், ஆகிய உபகரணங்களைஅயர்லாந்து அரச சார்பற்ற நிறுவனமான "கொன்சேர்ன் வேல்ட்வைட்" நிதியுதவியுடன் கிராம அபிவிருத்தி நிதியம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை வழங்கியது.

முதல் கட்டமாக ஆறு மீன்பிடிப்படகுகள், என்ஜின்கள், மீன்பிடிவலை மற்றும் உபகரணங்களை வழங்கியது. முதலில் வீரநகரிலும் பின்னர் மனையாவெளியிலும் இந் நிகழ்வுகள் இடம்பெற்றன. இந் நிகழ்வில் "கொன்சேர்ன் வேல்ட்வைட்" அமைப்பின் இலங்கை வதிவிடப்பிரதிநிதி ஜாக் பினுகோன், கிராம அபிவிருத்தி நிதிய ஆலோசகர் மிக்சில் ஆகியோரும், புத்தளத்தைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் கிராம அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் ஏ.சி.எம். மஹ்ரூப், செயலாளர் எம்.எம்.நிசார் ஆகியோரும் பங்குபற்றினர். (25)

# பெண்.விடுதலையுடன் கூடிய தேச விடுதலைக்கும் போராட வேண்டியது அவசியமாகிறது!

## -அம்பாறை மாவட்ட தமிழ்பேசும் பெண்கள் அமைப்பு

ஒரு மானிடப் பிறவிக்குரிய அனைத்து உரிமைகளையும் வென்றெடுக்கின்ற வீச்சோடு பெண்ணினம் தலை நிமிர்த்தி உரிமைக்குரல் எழுப்பிய உன்னத நாள் அனைத்துலகப் பெண்கள் நாள். இந்நாளில் தாயகத்தின் பூரண விடுதலையை அவாவி நிற்கும் தமிழ் பேசும் பெண்களாகிய நாம் ஒன்று கூடியுள்ளோம். இவ்வாறு அம்பாறை தமிழ் பேசும் பெண்கள் அமைப்பு மகளிர் தினம் தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ் அறிக்கையில்;

மனித உரிமை, மானிட விடுதலை என உயர்ந்த பல சிந்தனைகள் எழுதப்பட்டும், பேசப்பட்டும் வருகின்றன. ஆனாலும் கூட உலகின் அரைப்பங்கிற்கும் அதிகமான பெண்களின் உணர்வுகள் மறுக்கப்பட்டும், உரிமைகள் மீறப்படுகின்றதுமான அவலம் இப்பூமிப்பந்தின் மூலை முடுக்கெல்லாம் வெவ்வேறுபட்ட வடிவங்களில் நித்தமும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. கால மாறுதலுக்கேற்ப பெண் ஒடுக்குமுறையின் வடிவங்கள் மாற்றம் கண்டு வந்திருக்கின்றதே தவிர, அடிப்படைக் கருத்தியல் அப்படியேதான் உள்ளது. இந்நிலையில் தான் பெண்களின் உரிமை பேணப்பட்டு அவர்களின் வாழ்வு மேம்பட வேண்டுமானால் பல மாற்றங்கள் தேவையாக உள்ளன. சமூகத்தின் கல்வி, பொருளாதார மாற்றங்களோடு, மனித மனப்பாங்கிலும் மாற்றம் அவசியமாகின்றது. இந்த மாற்றத்தின் மூலமே ஆண், பெண் என்ற பாலியல் வேறுபாடுகளுக்கு அப்பாலான மனித ஆளுமை மதிக்கப்படுகின்ற பண்பு உருவாகும். பெண் விடுதலையும் சாத்தியமாகும்.

மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டங்களில் சிங்கள பேரினவாதத்தினால் காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த தமிழினப் படுகொலைகளில் அதிகம் பாதிக்கப் பட்டவர்கள் பெண்கள்தான். பாலியல் வல்லுறவு, படுகொலை என்பதோடு தம் வாழ்க்கைத்துணைவர்களை மிக இளம் வயதில் இழந்து ஆயிரக்கணக்கான பெண்கள் குடும்பச்சுமையை சுமக்கின்றனர். பல இடர்பாடுகளை எதிர் நோக்கியபடியே வாழ்கின்றனர். இத்தனையும் போதாதென்று அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தமும் பெண்களை மிக மோசமாகத் தாக்கிய கொடுமையாகும். வாழ்க்கைத் துணைவரை, பெற்றெடுத்த பிஞ்சு மழலைகளை, நேசித்த உறவுகளை, உடமைகளை ஓரிரு நிமிடங்களில் இழந்து இன்று அவர்கள் அனுபவிக்கும் அவலம் வார்த்தைகளால் விபரிக்க முடியாதவை.

ஒவ்வொரு பெண்ணும் தனது சுயபலத்தில் நம்பிக்கை வைத்து தனது ஆற்றலை வளர்த்தெடுக்க வேண்டியது அவசியமாகிறது. இது சாதாரணமாக நடைபெறக்கூடிய ஒரு விடயமல்ல. ஒவ்வொரு பெண்ணும் ஆழ்ந்து உணர்ந்து செயற்படுத்த வேண்டிய விடயம். ஏனெனின் இன்று பெண்ணின் அறிவு ரீதியான பார்வையை மழுங்கடித்து வெறும் கனவுலகத்திற்குள் அவர்களைச் சிறைப் படுத்தும் பல உத்திகள் கையாளப் படுகின்றன. எனவேதான் இன்றுதமிழ் பேசும் பெணகளாகிய நாம் எமது விடுதலைக்கான திறவுகோலை நாமாகவே கையிலேந்தியுள்ளோம். எமது விடுதலைக்காகவும், எமது மண்ணின் விடுதலைக்காகவும் சத்தியப் போரில் குதித்து நிற்கின்றோம்.

ஒட்டுமொத்தத்தில் இந்த மார்ச் எட்டு அனைத்துலகப் பெண்கள் தினமானது உலகில் வாழுகின்ற பெண்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் வெளிக்கொணருகின்ற தினமாக அமைந்துள்ளது. இந்தப் புரட்சிகரமான தினத்தில் தமிழ் பேசுகின்ற சமூகத்தின் இணை பிரியாத பங்காளிகளாகிய ஆண், பெண் இருவருமே இணைந்து நாம் வாழுகின்ற சமூகத்தின் விடுதலைக்காகவும்,அந்தச் சமூகத்தின் முக்கிய அங்கமாகிய பெண்களின் விடுதலைக்காகவும், பெண்விடுதலையோடு கூடிய தேச விடுதலைக்காவும் போராடவேண்டியது அவசியமாகிறது. எனவே இந் நன்நாளில் 'பெண்களுக்கெதிரான அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்' என அனைவரும் உறுதியெடுத்துக்கொள்வோம்.

மகளிர் அமைப்புக்கள்,
அம்பாறை மாவட்டம்.

# நாடு முழுவதும் கொலைகள் நடக்கின்றன அதைப் பரிசீலிப்பது எமது கடமையல்ல

## -கண்காணிப்புக்குழு தெரிவிப்பதாக - திவயின

நாட்டில் இடம் பெற்று வரும் கொலைகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல. அதைப்பரிசீலிப்பது எமது கடமையுமல்ல. இவைகளை சிறிலங் காப் பொலிசார் தான் பரிசீலனை செய்யவேண்டுமென போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளதாக நேற்று முன்தினம் திவயின சிங்கள நாளிதழ் செய்திவெளியிட்டுள்ளது.கிழக்கு மாகாணத்தில் கடந்த பல நாட்களாக நடக்கும் படுகொலைகள் காரணமாக சமாதானப் பேச்சு வார்த்தைகள் கடும் பாதிப்பிற்குள்ளாகி இருக்கின்றது. கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல நாடு முழுவதும் இச்சம்பவங்கள் ஏற்பட்டவண்ண முள்ளது. ஆனபடியால் நாட்டிலுள்ள மக்கள் மிகப்பயப்பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர். சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு முழு அனுசரணைகளும் வழங்குவோம். நாட்டில் நடக்கும் கொலைகளுக்கு நாங்கள் பொறுப்பாளியாக இருக்க மாட்டோம். அதைப் பரிசீலிப்பது எமது கடமையல்ல. இவைகளை சிறிலங்காப் பொலிசார் பரிசீலனை செய்ய வேண்டுமெனவும், இந்நடவடிக்கையால் சமாதானப்பேச்சு வார்த்தைகள் பலவீனமடையும் எனஅரசுக்கு அறிவித்திருக்கிறோமென இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மேலும் தெரிவித்துள்ளது.


வீடியோ மிக்ஸிங் ஆர்வலர்களுக்கு உதயமாகின்றது

நிலவு கணனித் தொழில்நுட்பம்

கச்சேரி அருகாமை, (பழைய P.S.T) கிளிநொச்சி.

வீடியோ மிக்ஸிங் படிக்கவிரும்புபவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

ஆரம்பம் 14.03.2005 (ஞாயிறு)

- Adobe Premier
- Adobe Photoshop
- Flash
- CorelDraw

CD விற்பனை

- நிலவு . COM ன் தமிழில் ஓர் வழிகாட்டி (Learning CDS)
- Software CD's
- English CD's
- Games CD's

ஏனைய சேவைகள்

- போட்டோக் கொப்பி
- Type Setting
- Laminating
- CD writing

கணனி திருத்துதலும் சேர்விஸ் செய்தலும் (Computer Repairing & service)

(சீ-11387)

வீடியோ மிக்ஸிங் செய்பவர்களுக்கு எம்மிடம் வீடியோபின்புலம் (Video Background DvD/CD) எம்மிடம் உண்டு



உ
சிவமயம்

"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பலிக்குக" கரைச்சி

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப் பொங்கல் விழா 25.03.2005. இன் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர் களுக்கான

அறிவித்தல்

'மேற்படி பொங்கல் விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில ஏல விற்பனை 13.03.2005 ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் என்பதை சகல வாணிபர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்,
ஆலயபரிபாலனசபை.

(சி.11386)

# சேது சமுத்திர கால்வாய் திட்டப்பணி

# மூன்று ஆண்டுகளில் பூர்த்தியாகும்

## அமைச்சர் டி.ஆர்.பாலு



டி.ஆர்.பாலு

சேதுசமுத்திரக்கால்வாய் திட்டப் பணிகள் மூன்று ஆண்டுகளில் நிறைவு பெறும் என்று இந்திய மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்து பேசிய இந்திய மத்திய கப்பல்துறை, சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் டி.ஆர்பாலு கூறுகையில்

சேது சமுத்திர கால்வாய்திட்டப்பணிகள் தொடங்கிய மூன்று ஆண்டுகளில் இந்தத்திட்டப்பணிகள் நிறைவு பெறும்போது மேற்குக் கரையில் இருந்து கிழக்குக் கரைக்குக் கப்பல்கள் செல்லும் போது இலங்கையைச் சுற்றி செல்லாமல் இந்திய நீர்ப்பரப்பிலேயே போக முடியும். இதனால் பயணத் தூரம் 400 கடல் மைல்களும், பயண நேரமும் 30 மணி நேரமாகக் குறையும். சேது சமுத்திரக் கால்வாய் திட்டப்பணியால் மன்னார் வளைகுடாவில் தேசிய கடல் பூங்காவும் வளங்களும் பாதிக்கப்படுவதுடன் மீனவர்களும் பாதிக்கப்படுவார்கள் என்று சுற்றுச் சூழல் ஆர்வலர்களில் ஒரு பகுதியினர் கவலை தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டப்பணிகளை ஒருங்கிணைத்து வரும் தூத்துக்குடி துறைமுகம் நாக்பூரில் உள்ள தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சிக்கழகம் மேற்கொண்ட விரிவான ஆய்வுகள் குறித்து பொதுமக்களுக்கும் சுற்றுச் சூழல் ஆர்வலர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. சேது சமுத்திர கால்வாய் திட்டப்பணிகள் சுற்றுச் சூழலுக்கு முன்னுரிமை கொடுத்தே வரையப்பட்டு உள்ளது. மேலும் இத்திட்டப் பணிகளினால் மன்னார் வளைகுடா பகுதியின் வளங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற கவலை சரியானதல்ல. மீன்பிடியும் பாதிக்கப்பட மாட்டாது என்று தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சி கழகத்தின் ஆய்வு தெரிவிக்கிறது. இந்தத்திட்டத்தைச் செயற்படுத்தும் போது சுற்றுச் சூழலை கண்காணிப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளதென பாலு கூறினார்.

# பங்காரப்பா பதவி துறந்தார்


கர்நாடக முன்னாள் முதல்வர் பங்காரப்பா தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார் மேலும் பா.ஜ.விலிருந்து விலகி சமாஜ்வாடி கட்சியில் சேர்ந்தார்.

கர்நாடக முன்னாள் முதலமைச்சர் பங்காரப்பா மக்களவை தேர்தலுக்கு முன்னர் காங்கிரஸை விட்டு விலகி பாரதிய ஜனதாவில் சேர்ந்தார் சிமோகா தொகுதியில் போட்டியிட்டு மக்களவைக்கு தேர்ந்து எடுக்கப்பட்டார். நேற்று முன்தினம் பங்காரப்பா பாரதிய ஜனதாவை விட்டு விலகினார். எம்.பி.பதவியையும் ராஜினாமா செய்தார். அதை மக்களவை கூட்டத்தில் சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி அறிவித்தார். ராஜினாமாவை ஏற்றுக்கொண்டதாவும் சபாநாயகர் கூறினார்.

பாரதிய ஜனதாவை விட்டு விலகிய பங்காரப்பா உத்தர பிரதேச முதலமைச்சர் முலாயம் சிங்யாதவ் தலைமையில் உள்ள சமாஜ்வாடி கட்சியில் சேர்ந்தார் “பங்காரப்பா சமாஜ்வாடி கட்சியில் சேர்ந்ததால் கட்சி பலம் பெறும்” என்று முலாயம் சிங்யாதவ் கூறினார் மார்ச் 25 ஆம் திகதி சமாஜ்வாடி மாநாட்டை பெங்களூரில் கூட்ட இருப்பதாக பங்காரப்பா கூறினார். “பாரதிய ஜனதாவை விட்டு பங்காரப்பா போனதால் கர்நாடகத்தில் கட்சிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது” என்று கர்நாடக மாநில பா.ஜ.க மூத்த தலைவர் எடியுரப்பா கூறினார்.

# விஜேந்திரரிடம் குற்றப்பத்திரிகை வழங்கப்படுவதில் தாமதம்!

சங்கரராமன் கொலை வழககில் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் சங்கரமடாதி பதிகளில் ஒருவரான விஜேந்திரர் கொலை வழக்கின் குற்றப் பத்திரிகை பெறுவதற்காக நேற்று முன்தினம் காஞ்சிநீதிமன்றுக்குச் சென்றார். ஆனால் வரும் 24ஆம் திகதியே குற்றப்பத்திகை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டதையடுத்து அவர் திரும்பிச் சென்றார்.



நீதிமன்றத்திலிருந்து திரும்பிச்செல்லும் விஜேந்திரர்

சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரர், விஜேயேந்திரர் உட்பட 25 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் ஒப்பந்ததாரர் ரவிசுப்பிரமணியம் அரசதரப்புச் சாட்சியாக மாறிவிட்டார். அப்பு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும் ஜெயேந்திரர், விஜேயேந்திரர் ஆர்டி பழனி ஆர். ஆறுமுகம், செந்தில்குமார் ஆகியோர் பிணையில் வெளியே உள்ளனர். இவர்களில் ஜெயேந்திரர் கலவை மடத்திலும், விஜேயேந்திரர் சென்னை ராஜா அண்ணாமலை புரத்திலும் தங்கியுள்ளனர். இந் நிலையில் இவ்வழக்கு நேற்று முன்தினம் பிற்பகல் 1.45 மணிக்கு விசாரணைக்கு வந்தது. காஞ்சிபுரம் முதல் வகுப்புச் சட்டவாளர் உத்தமராஜ் விசாரணை நடத்தினார். அப்போது நீதிமன்றில் விஜேயேந்திரர், ஆர்.டி.பழனி, ஆர்.ஆறுமுகம், செந்தில்குமார் ஆகிய நான்கு பேர் ஆஜரானார்கள் என்பது. குறிப்பிடத்தக்கது.

# ஜோர்ஜ் பெர்னாண்டஸைக் கண்டித்து காங்கிரஸ் தொண்டர்கள் போராட்டம்



ஜோர்ஜ் பெர்னாண்டசின் கொடும்பாவி எரிக்கும் காங்கிரஸ் கட்சியினர்.

சோனியா காந்தி பற்றி கருத்துத் தெரிவித்த ஜோர்ஜ் பெர்னாண்டசுக்கு எதிராக காங்கிரசார் அவரது கொடும்பாவியை எரித்தனர்.


அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைப் பற்றி முன்னாள் மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அளித்த பேட்டியில் இந்திராகாந்திக்கு நேர்ந்த கதி அவருக்கு ஏற்படும் என்று கூறியதைக் கண்டித்து காங்கிரசார் தமிழகம் முழுவதும் போராட்டத்தில் குதித்துள்ளனர். தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை அலுவலகமான சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு காங்கிரசார் பெருமளவில் திரண்டனர். அவர்கள் ஜோர்ஜ் பெர்னாண்டசைக் கண்டித்து கோஷம் எழுப்பினர். அவரது உருவ பொம்மையை எடுத்து வந்து தீயிட்டுக் கொளுத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. கைது செய், கைதுசெய் ஜோர்ஜ் பெர்னாண்டசை கைது செய் என்று அவர்கள் முழங்கினர்.

# தி.மு.க.வின் திண்டுக்கல் மண்டல மாநாடு இன்று கோலாகல ஆரம்பம்

தமிழ்நாடு திண்டுக்கல்லில் மண்டல மாநாடு ஒன்றை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிலையில் இம் மாநாடுஇன்றும் நாளையும் நடைபெறவுள்ளதாக திராவிட முன்னேற்றக்கழக வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

தி.மு.க. வினரின் இப்பிரத்தியேக மாநாட்டில் கலந்து கொள்ளவென தமிழ் நாட்டில் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் இலட்சக்கணக்கான தி.மு.க. தொண்டர்கள் திண்டுக்கலில் விழா நடைபெறும் இடத்தில் திரண்டவண்ணம் உள்ளனர்.

திண்டுக்கல், தேனி, மதுரை, புறநகர் பகுதி உள்ளடங்கியதான இம் மண்டல மாநாடு சுமார் 150 ஏக்கர் பரப்பளவுகொண்ட பரந்த நிலப்பரப்பில் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.



தி.மு.க.வினரின் மாநாட்டு மண்டபத்தின் உள்தோற்றம்

# நீதித்துறை சட்டமன்றத்தில் தலையிடுவதா? ஜார்க்கண்ட் விவகாரம் புதிய கோணத்தில்

ஜார்க்கண்டில் ஆட்சியமைப்பதற்கு சிபுசோரன் அழைக்கப்பட்டது முறையற்றது எனக் கூறித் தம்மிடம் பெரும்பான்மை உள்ளதென தெரிவித்து பா.ஜ.க.வினர் எதிர்ப்பில் ஈடுபட்டனர் அதையடுத்து உயர் நீதிமன்றம் விடுத்த அறிவித்தல் ஒன்றில் சிபுசோரன் உடனடியாகவே சட்டமன்றத்தைக் கூட்டித்து தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமென தெரிவித்திருந்தது.


இது சட்டமன்றத்தின் அதிகாரத்தில் தலையிடும் செயல் என்று பாராளுமன்ற உறுப்பினர்களிடையே கருத்து நிலவியது. இந்தப் பிரச்சினை நேற்று முன்தினம் பாராளுமன்ற இரு அவைகளிலும் வெடித்தது. மார்க்சிய கம்யூ..உறுப்பினர் பாசுதேவ் ஆச்சார்யா மக்களவைக் கேள்வி நேரத்திலும்,அதே கட்சியைச் சேர்ந்த நீலோத்பல் பாசு மாநிலங்களவை ஜீரோ நேரத்திலும் இந்தப் பிரச்சினையை கிளப்பினார்கள். சட்டமன்றம்.நீதித்துறை இரண்டுக்கும் சமமதிப்பு வேண்டும். ஒன்று அடுத்த தன் விவகாரத்தில் தலையிடக் கூடாது என்று எம்.பி.கள் கருத்துத் தெரிவித்தனர். ‘சட்ட மன்ற விவகாரத்தில் உயர்நீதிமன்று மூக்கை நுழைக்கக் கூடாது என்று இந்திய கம்யூனிஸ்டு உறுப்பினர் குருதாஸ் குப்தா கருத்துத் தெரிவித்தார். இதற்கு மாநிலங்களவை பா.ஜ.உறுப்பினர் சுஷ்மா சுவராஜ்,பல்பீர் புன்ஞ் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த நிலையில் மேற்படி பிரச்சினை குறித்து ஆராய மக்களவை சபாநாயகர் சோம் நாத் சாட்டர்ஜி டில்லியில் நேற்று முன்தினம் அனைத்துக்கட்சி கூட்டத்தைக் கூட்டுவதாக அறிவித்தார். அதன்படி அனைத்துக் கட்சிக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடந்தது.அதில் பா.ஜ.சார்பாக மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஜஸ்வந்த்சிங்,வி.கே.மல்ஹோத்ரா ஆகியோர் பங்கேற்றனர் ஆனால் பாதியில் அவர்கள் கூட்டத்தை புறக்கணித்துவிட்டு திடீரென வெளியேறினார்கள்.

# அரியானாவில் பத்து பேர் கொண்ட அமைச்சரவை பதவியேற்பு

அரியானவில் முதல்வர் பூபேந்தர்சிங் ஹீடா நேற்று முன்தினம் பத்து பேர் கொண்ட அமைச்சரவையை அறிவித்தார். அந்த பத்து அமைச்சர்களும் நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டனர். பதவியேற்பு நிகழ்ச்சி சண்டிகரில் உள்ள ஆளுநர் மாளிகையில் மாலை ஐந்து மணியளவில் நடந்தது. மாநில ஆளுநர் ஏ.ஆர்.கித்வாய் புதிய அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் பஜன்லாலுக்கு அமைச்சர்பதவி கொடுக்கப்படவில்லை. ஆனால் அவரது மகன் சந்தர் மோகன் நேற்று முன்தினம் அமைச்சராக பதவியேற்றார்.

# பாலாஜியின் வேகத்தில் சரிந்தது பாகிஸ்தான்

## மொகாலி டெஸ்டில் வெற்றிப்பாதையில் இந்தியா






இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் மொகாலியில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி இக்கட்டான நிலையை எதிர்நோக்கியுள்ளது.


போட்டியின் நான்காம் நாளான நேற்று தனது முதல் இனிங்சிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 447 ஓட்டங்களுடன் துடுப்பாட்டத்தை தொடர்ந்த இந்தியா 516 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் சேவாக்173 ஓட்டங்களையும், டெண்டுல்கர் 94 ஓட்டங்களையும், லக்ஸ்மன் 58 ஓட்டங்களையும் அதிகபடட்சமாக பெற்றனர்.பந்துவீச்சில் டெனிஸ் கனேரிய 53.4 ஓவர்கள் பந்துவீசி 150 ஓட்டங்களை கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

204 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இனிங்சை தொடர்ந்த பாகிஸ்தான் பத்து ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய போது ஆடுகளம் நுழைந்த



அணித்தலைவர் இன்சமாம் யுஹானாவுடன் இணைந்து பதற்றத்தை தனித்ததுடன் ஓட்டங்களையும் குவித்தார்.இருவரும் இணைந்து நான்காவது விக்கெட்டுக்காக 139 ஓட்டங்களை குவித்தனர்.இன்சமாம் 86 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின் யுஹானாவுடன் ஆசிம் கமால் இணைந்தார். இருவரும் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தபோது கும்ளேயின் பந்து வீச்சில் யுஹானா 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் அசிம் கமாலுடன் அப்துல்ரசாக் இணைந்து இருவரும் நிதானத்துடன் ஆடினர். அசிம் கமால் 48 ஓட்டங்களுடன் பாலாஜியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இதன்மூலம் பாகிஸ்தான் நேற்றைய ஆட்டநேரமுடிவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்று இந்தியாவைவிட 53 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.இந்தியா பந்துவீச்சில் பாலாஜி மூன்று விக்கெட்டுக்களையும் கும்ளே இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இறுதி நாளான இன்று நான்கு விக்கெட்டுக்கள் கைவசம் கொண்டுள்ள பாகிஸ்தானால் இந்தியாவின் வெற்றியை தடுத்து நிறுத்துவது என்பது கடினமானதாகவே இருக்கும்.

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் நியூசிலாந்து அணி 433 ஓட்டங்கள் குவிப்பு






நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணிக்கும், நியூசிலாந்து அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று முதல் இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் அவுஸ்திரேலியா மூன்று விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களை பெற்றிருந்தது.


துடுப்பாட்டத்தில் லாங்கர் 23,ஹெய்டன் 35, மாட்டின் 32, முறையே ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

ஆட்டமிழக்காது பொண்டிங் 41, கிளெஸ்பி ஓட்டமெதுவும் பெறாமலும் களத்திலிருந்தனர்.

பந்துவீச்சில் சமிறங்லீன் விக்டோரி தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

கிரிட்செச்சில் நடைபெற்று வரும் மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா நியூசிலாந்தை துடுப்பெடுத்தாட பணித்தது.





இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து முதல் இனிங்சிற்காக அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 433 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் மார்சல் டெஸ்ட் போட்டியில் கன்னி சதத்தைப் பெற்றார். அவர் 23 நான்கு ஓட்டம் ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 146ஓட்டங்களைப் பெற்றார். இவரைவிட கம்பிங் 74, அஸ்ரல் 74, விக்டோரி ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் 42 ஓவர்கள் பந்து வீசிய மெக்ராத் 115, ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இதைவிட வோர்ன் இரண்டு விக்கெட்டுக்களையும் கஸ்பரோவ், கிளார்க் தலா ஒவ்வொரு விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# இந்திய- பாகிஸ்தான் போட்டியைக் காண சனாதிபதி முஷாரப் இந்தியா வருகிறார்



ஆறு வருடங்களுக்குப் பிறகு பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இந்த போட்டியைக்காண தனக்கு அழைப்பு விடுத்தால் இந்தியா வருவேன் என பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் கூறியிருந்தார். இதைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன்சிங், சனாதிபதி முஷாரப்புக்குக் கடிதம் எழுதினார்.

இந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட முஷாரப் போட்டியைக் காண இந்தியா வருவதாகக் கூறியுள்ளார். அவர் கொல்கத்தாவில் வரும் 16 ஆம் திகதி தொடங்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியைக் காண வருகிறார். இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டியைக்காண இந்தியாவுக்கு வருமாறு பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரபுக்கும், அவரது குடும்பத்துக்கும் பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முன்தினம் அழைப்பு விடுத்திருந்தார்.



தாய்வானின் தாய்பேய் நகரில் நடைபெறும் கிழக்காசிய உதைபந்தாட்டப் சம்பியன் போட்டியில் தாய்வான் வீரர்கள் சியான் சிங்லுவும், காயோ ஹாயோவும் சீன வீரர் சன் வய்குவின் பந்தை மறிக்க முயற்சிக்கின்றனர்.

# இந்திய சுற்றுப் பயணத்தில் நான் பங்கேற்கும் வாய்ப்பில்லை




" இந்தியப் பயணத்தில் நான் பங்கேற்கும் வாய்ப்புகள் இல்லை" எனப் பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகத்துக்கு தெரிவித்துள்ளார் சொகைப் அக்தர்.

மொகாலி டெஸ்ட் கடந்த புதனன்று ஆட்டம் முடிந்த பிறகு பேட்டியளித்த அந்த அணி முகாமையாளர் சலிம் அல்டாப் " அக்தர் விரைவாக குணமடைவதாகத் தகவல் வந்திருக்கிறது. அனேகமாக அவர் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்பார். இது சம்பந்தமாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகளிடம் பேசியிருக்கிறேன் என்றார் இதற்கு நேற்று முன்தினம் மறுப்புத் தெரிவித்துள்ளார் அக்தர்.

"நான் விரைவாகக் குணமாகி வருவது உண்மைதான். ஆனால் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்கப் போவதாக வரும் செய்திகள் முழுக்க முழுக்கத் தவறானவை. மூன்றாவது டெஸ்ட் மட்டுமல்ல.. அதைத் தொடர்ந்து வரும் ஒரு நாள் தொடரிலும் கூட நான் பங்கேற்க மாட்டேன். காரணம் எனது காயம் நூறு சதவீதம் குணமாக வேண்டுமானால் குறைந்தது மூன்று வாரமாவது ஓய்வெடுக்கவேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்" என்றார் எக்ஸ்பிரஸ் அக்தர்.

# முல்லை. மாவட்டத்தின் கழகங்களுடனான சந்திப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கும், விளையாட்டுக்கழகங்களின் தலைவர்,செயலாளர்களுக்கும் மற்றும் ஆர்வலர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 11மணிக்கு புதுக்குடியிருப்பில் உள்ள முல்லை மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் , முல்லை மாவட்ட விளையாட்டு துறைப. பொறுப்பாளர் கமல் தலைமையில் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் 2005ஆம் ஆண்டுக்கான மாவட்டத்தின் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பாகவும், கழகங்கள் புனரமைப்பது உள்ளிட்ட பலமுக்கிய விடயங்கள் ஆராயப் பட்டன.

இக்கலந்துரையாடலில் முல்லை. மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன், தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

கலந்துரையாடலின் முடிவில் ஒவ்வொரு கழகங்களின் தலைவர்களிடமும் உதைபந்தாட்டத்திற்கான பந்து வழங்கப்பட்டது. இதில் முதலாவது பந்தினை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் வழங்கினார். (08,கு)




# பட்டவாய்ப்பை இழந்தார் ஆனந்த்

லினாரஸ் செஸ் தொடரில் விஸ்வநாதன் ஆனந்த் முன்றாவது இடத்திற்கு பின்தங்கினார் ஸ்பெயினின் லினாரஸ் நகரில் சூப்பர் கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் தொடர் நடக்கிறது. இதில் 13 ஆவது சுற்றுப் போட்டியில் இந்தியாவின் ஆனந் முதல் நிலை வீரரான ரஷ்யாவின் கஸ்பரோவை எதிர்த்து விளையாடினார். இரு வீரர்களும் கவனமுடன் காய் நகர்த்த போட்டி சமநிலையில் முடிந்தது. இதன் மூலம் ஆனந்த் 6.5 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திற்கு பின்தங்கினார். ஸ்பெயினின் பிரான்சிஸ் கோவை வீழ்த்திய பல்கேரியாவின் வேசலின் தபலோவ் 7 புள்ளிகளுடன் இராண்டாவது இடத்திற்கு முன்னேறினார்.

கஸ்பரோவ் எட்டுப் புள்ளிகளுடன் முதல் இடத்தில் இருந்து வருகிறார். இன்னும் ஒரேயொரு சுற்று மட்டுமே மீதமுள்ளதால் சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பை இழந்து விட்டார் ஆனந்த். எட்டாவது முறையாக கஸ்பரோவ் சம்பியன ஆவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளது.

# நுவான் சொய்சாவின் இடத்தை நிரப்புகிறார் ருச்சிரபெரேரா



நியூசிலாந்து செல்லும் சிறிலங்கா அணியில் நுவான் சொய்சாவுக்கு பதிலாக ருச்சிர பெரேரா அழைக்கப்பட்டுள்ளார்.

இவ்வணியில் முரளிதரன் பங்கேற்கவில்லை. பெரேரா அண்மையில் நடைபெற்ற மாகாண அணிகளுக்கிடையிலான போட்டியில் சிறப்பாக ஆடியுள்ளார். அவர் 127 ஓட்டங்களைக் கொடுத்து ஒன்பது விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அத்துடன் 2002ஆம் ஆண்டு இங்கிலாந்துடனான போட்டியிலும் சிறப்பாக பந்துவீசினார்.

நுவான் சொய்சாவின் காயம் இவருக்கு தேசிய அணியில் வாய்ப்பளித்துள்ளது.தேர்வுக் குழுவின் உறுப்பினரான அசந்தா டிமெல் இவரது திறமைபற்றி பாராட்டியிருக்கிறார்.

நியூசிலாந்துடனான முதலாவது டெஸ்ட்போட்டி ஏப்பிரல் நான்காம் திகதி ஆரம்பமாகிறது.

# கிரிக்கெட் ரசிகர்களின் ஆவலைத் தூண்டும் கல்லூரிகளுக்கிடையிலான போர் ஆரம்பம்

யாழ் குடாநாட்டு கிரிக்கெட் ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புடன் இருந்த இரண்டு கிரிக்கெட் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

பொன் அணிகளின் மோதல் எனக் கூறப்படும் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையேயான ஆட்டங்கள் நேற்றுக் காலை 9.00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

87ஆவது போட்டியாக இடம்பெற்ற இப் போட்டி மிகவும் சிறந்த முறையில் இடம் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இரு கல்லூரிகளும் மேற்கொண்டுள்ளன.

கடந்த காலத்தில் இடம்பெற்ற போட்டிகளில் சென் பற்றிக்ஸ் கல்லூரி 27 தடவைகளும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 15 தடவைகளும் வெற்றி அடைந்துள்ளார்கள்


வலிகாமப் பகுதி கிரிக்கெட் ரசிகர்களை பரவசப்படுத்தும் நாயகர்களின் துடுப்பாட்டப் போர் நேற்று நண்பகல் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் சுன்னாகம் கந்தரோடை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையே இடம்பெறும் ஐந்தாவது வருடப் போட்டியாகும்.

கடந்த நான்கு ஆண்டுகளிலும் இடம்பெற்ற போட்டிகள் அனைத்தும் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐந்தாவது ஆண்டில் இருந்து இரு கல்லூரி அணிகளினதும் பழைய மாணவர்களுக்கு இடையேயான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய போட்டி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (41)

### சிந்தனைக்கு



நான் எப்பொழுதும் பேச்சுக்குத் தருவது குறைந்தளவு முக்கியத்துவமே; செயலால் வளர்ந்த பின்புதான் நாம் பேசத் தொடங்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

# சிறிலங்கா இராணுவத்திற்கு மீண்டும் ஆட்சேர்ப்பு

(வவுனியா செய்தியாளர்)

சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் கடந்த ஏழாம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன

கொழும்பு, காலி, கம்பகா, களுத்துறை, மொனராகலை, கேகாலை, கண்டி, மாத்தறை, பதுளை, அனுராதபுரம், நுவரெலியா, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, பொலநறுவை, புத்தளம், அம்பாறை, குருநாகல், மாத்தளை ஆகிய மாவட்டங்களின் சகல பிரதேச செயலகங்களிலும், இம் மாவட்டங்களில் உள்ள இராணுவ முகாம்களிலும் இந்நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

இவ் இராணுவ ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகைமையாக 8 ஆம் தர சித்தியும் 18 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்டிருத்தலுமாகும் இந் நேர்முகப் பரீட்சைகள் இம மாதம் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக இராணுவ ஆட்சேர்ப்பு பணிப்பகம் அறிவித்துள்ளது.

(10)

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 12-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

## தடை எதுவுமில்லை!

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஒருதடவை ஜே.வி.பி.யினரைத்தான் பொருட்படுத்தப்போவதில்லை என்ற அர்த்தத்தில் பேசியுள்ளதோடு கூட்டணிக்குள் எத்தகைய பிரச்சினை ஏற்பட்டாலும் இனப்பிரச்சினைக்குச் அரசியற் தீர்வு காணப் போவதாகவும் சூளுரைத்துள்ளார்.

இதற்கு முன்பதாக இனப்பிரச்சினைக்கு சமஷ்டி மூலம் தீர்வு காணப்படும் எனவும், அதற்கு ஆதரவாக 80 வீதத்திற்கு மேற்பட்ட மக்கள் ஆதரவாக உள்ளனர் எனவும் தெரிவித்துள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்வு முயற்சியை எதிர்ப்பவர்கள் "முட்டாள்கள" எனவும் சாடியுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெயர் குறிப்பிட்டுப் பேசாது போனாலும் தனது கூட்டணியில் உள்ளவர்களை விமர்சிப்பது ஜே.வி.பி யையே என்பது அனைவருக்குமே தெரிந்ததொன்று. இது ஜே.வி.பிக்கும் தெரியாததொன்றல்ல. ஆனால் சனாதிபதி சந்திரிகா அவ்வாறு தான் விமர்சித்தாலும், பிடரியில் பிடித்துத் தள்ளினாலும் ஜே.வி.பி ஆட்சியை விட்டு வெளியேறுமா என்பது கேள்விக்குரிய தொன்றே.

ஆகையினால், சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி ஆட்சியைக் கவிழ்த்துவிடுமென அச்ச முறுவதும் ஜே.வி.பி யினரைக் சுட்டித் தமது நடவடிக்கையினைப் பிற்போடுவதும் பொருத்தமானதுமல்ல. தேவையானதும் அல்ல. அதேவேளை ஜே.வி.பி. அரசாங்கத்தை விட்டு வெளியேறினால் கூட சனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கம் உடனடியாகக் கவிழ்ந்து விட மாட்டாது. இதேசமயம் ஜே.வி.பி. ஆட்சியை விட்டு வெளியேறுவதால் பெரும் பலம் பெற்று விடும் என்றும் இல்லை.

ஏனெனில் ஆட்சி அதிகாரத்தை விட்டு ஜே.வி.பி வெளியேறின் அதுவே அண்மைக்காலம் வரையும் அரசாங்கம் மேற்கொள்ளத் தவறிய அபிவிருத்தி மற்றும் நிவாரணப்பணிகளின் பாதிப்பிற்கு ஜே.வி.பியைக் காரணியாக்கி விட முடியும். இதேசமயம் வெளியில் இருந்து கிடைக்கப்பெறும் நிதியுதவியைக் கொண்டு சுனாமி அனர்த்தம் உட்பட ஏனைய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவும் முடியும்.

அடுத்ததாக சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவான நிலைப்பாடு என்னும்போது எதிர்க்கட்சியினரும் முழு அளவில் அரசிற்கு எதிராகச் செயற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் இல்லை. ஏனெனில் சமாதானப்பேச்சுவார்த்தைக்கு அவர்கள் வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்து வருகிறனர். இதனால் ஆட்சியைக்கவிழ்ப்பது சமாதான முயற்சிகளைக் கவிழ்ப்பதாகிவிடும்.

இதனைத் தவிர சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் தமிழர் தரப்பு ஆதரவு என்பது சனாதிபதி சந்திரிகாவிற்குக் கிடைக்க வாய்ப்புண்டு. சமாதான முயற்சியில் காணும் முன்னேற்றம் அவரது அரசாங்கத்தைப் பலப்படுத்துவதாகவே அமையும்.

அத்தோடு சமாதான முயற்சிகள் தொடங்கப்படும் பட்சத்தில் சர்வதேச நாடுகளினதும், உலக நிதி நிறுவனங்களினதும் நல்லபிப்பிராயத்தைச் சனாதிபதி சந்திரிகா பெற்றுக் கொள்வதற் கான வாய்ப்புக்களும் உண்டு. ஆகையினால் அரசாங்கம் கவிழ்க் கப்படும் என்ற அச்சமும் தேவையற்றதொன்று.

அதற்கும் அப்பால் அரசாங்கம் கவிழ்க்கப்படுமானால் சனாதிபதி சந்திரிகா சமாதானத்தை வலியுறுத்தி மீண்டும் ஒரு தேர்தலைச் சந்திக்க முனையலாம். மக்களில் 80 சதவீதமானவர் கள் சமாதானத்திற்கு ஆதரவாளர்கள் எனச் சனாதிபதி சந்திரிகாவே கருதும் இடத்து, தேர்தலைச் சந்திக்க சனாதிபதி சந்திரிகா சிந்திக்க வேண்டிய தேவையில்லை.

ஆகையினால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சி கவிழும என்றோ, தமது கட்சி அரசியல் நெருக்கடியைச் சந்திக்க வேண்டி வரும் என்ற அச்சத்தின் காரணமாகவோ சமாதான முயற்சிகளை ஓரம் தள்ளவோ, முன்னெடுக்காது விடவோ வேண்டியதில்லை. சமாதான முயற்சியில் அக்கறை கொண்டவர்களாக இருப்பின் இதுவரையில் சமாதான முயற்சிகளில் பெரும் முன் னேற்றம் கண்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் கூட உண்டு.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பி யினரை விமர்சிப்பதுடன் மட்டும் நின்று கொள்வதானது அவர் அதற்கு அப்பால் அதாவது அரசியல் தீர்வு முயற்சியிலோ அன்றி சுனாமி அனர்த்த நிவாரணப்பணிக்கான பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தும முயற்சியிலோ அக்கறை அற்றவராக நொண்டி சாட்டு தேடுபவராகவே இருக்கமுடியும். அவ்வாறில்லாது விடில் சனாதிபதி தடையின் றிச் செயற்பட்டிருத்தல் வேண்டும்.

## தமிழகத்திலிருந்து திரும்பியவரிடம் போதைப் பொருள் கண்டு பிடிப்பு

தமிழகத்திலிருந்து மன்னார் ஆழ்கடல் வழியாக நேற்றிரவு 20 தமிழர்கள் தாயகம் திரும்பியுள்ளதாக தலைமன்னார் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடல் வழியாக படகுகளில் வருவது ஆபத்தானது என தெரிந்தும் இவர்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்துள்ளனர். கடற்படையினரால் இவர்கள் சோதனையிட்டபோது ஒருவரிடம் ஒன்றரைக் கிலோ போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.அகதிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் அவர்களுடைய சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## புத்தசாசன அமைச்சைப் பொறுப்பேற்குமாறு எனக்கு எவரும் ஆலோசனை கூறவில்லை

### ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்றக் குழுத்தலைவர்

(கொழும்பு)

புத்தசாசன அமைச்சை ஏற்குமாறு இதுவரை தமக்கு ஒருவரும் ஆலோசனை வழங்கவில்லை என ஜாதிகஹெல உறுமய பாராளுமன்ற குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக சில ஊடகங்கள் தனது பெயருக்கு களங்கம் விளைவிக்கும் விதத்தில் சில அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. நாங்கள் முன்னெடுத்துச் செல்லும் அரசியல் கொள்கைகளை பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் இந்த விசமத்தனமான பிரச்சாரங் களை மேற்கொண்டு வருவதுடன், சில ஊடகங்களும் இதற்கு துணை போவதாக உடுவே தம்மாலோக தேரர் கூறியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ரட்ண சிறி விக்கிரம நாயக்காவிடமுள்ள புத்த சாசன அமைச்சை ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவர் தம்மாலோக தேரருக்கு வழங்கப்படவுள்ளதாகவும், இதனையடுத்து ரட்ணசிறி விக்கிரம நாயக்க விரக்தியடைந்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

### -ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக-

## மாணவர்-பொலீசார் மோதல் மூவர் காயம்; இருவர் கைது

தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுவதனை எதிர்த்து கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதுவரை பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் போராட்டங்களை நடத்தி வந்த மாணவர்கள் நேற்று ஹைலெவல் வீதியை நோக்கி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்த முற்பட்டனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 15 ஆவது வருட தேசிய மாநாடு மஹரகம இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொள்ள சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வருகை தரவுள்ளதால் ஆர்ப்பாட் டக்காரர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிசார் உத்தரவிட்டனர். இதனையடுத்து மாணவர்களுக்கும், பொலிசாருக்கும் இடையே மோதல் வெடித்தது. மாணவர்கள், பொலிசாரை நோக்கிக் கற்களையும் பொல்லுகளையும் வீசினர். மாணவர்களைக் கலைக்க பொலிசார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியதுடன் றப்பர் தோட்டாக்களைப் பயன்படுத்தி சுட்டனர். இதில் மூன்று மாணவர்கள் காயமடைந்தனர். சந்தேகத்தின் பேரில் இரு மாணவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இதேவேளை இரு மாணவ குழுகளுக்கு இடையே ஏற்பட்ட மோதல்கள் காரணமாக கொழும்பு பல்கலைககழகம் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது. கடந்த புதன கிழமை முதல் தொடர்ந்து இடம் பெற்றுவந்த மோதல் நேற்றுக் காலை உக்கிர மடைந்ததைத் தொடர்ந்து முகா மைத்துவப் பீடம், கலைப்பீடம், சட்டபீடம் என்பன மூடப்பட்டுள்ளன.

## திலீபன் மருத்துவமனையின் 3ஆம் ஆண்டு நிறைவு விழா

கற்சிலை மடுவில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா நேற்று மாலை 3.00 மணிக்கு திலீபன் மருத்துவ மனையில் சிறப்பாக நடைபெற்றது.

திலீபன் மருத்துவமனைகுழுச் செயலாளர் வே.தயா அவர்களின் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை முல்லை. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் மூர்த்தி அவர்கள் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்கள் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் உருவப்படத்துக்கு ஈகச் சுடரினை முத்தையன்கட்டு பல. நோ.கூ.ச. உதவிப் பொதுமுகாமையாளர் கனகசபாபதி ஏற்றி வைக்க, மலர்மாலையை திலீபன் மருத்துவமனை மருத்துவர் செவ்வானம் அணிவித்தார். கருத்துரைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழக முல்லை. மாவட்ட பணிப்பாளர் மூர்த்தி, மருத்துவர் செவ்வானம் ஆகியோர் வழங்கினர். இதனையடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மருத்துவமனைக்கு ஒரு தொகுதி பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் துறைசார்ந்த பொறுப்பாளர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங களின் ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (08)

## பெற்றோல் விலையை அதிகரிக்க ஆலோசனை

பெற்றோலின் விலையை அரசு மீண்டும் அதிகரிப்பது தொடர்பாக ஆலோசித்து வருகின்றது. இது தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி கூறுகையில்; உலக சந்தையில் பெற்றோலின் விலை மேலும் உயர் நிலையில் இருந்தால் பெற்றோலின் விலையை மறுசீரமைப்பது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிவரும் என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மாதம் ஒன்றிற்கு 1480 மில்லியன் ரூபா நட்டமடைவதாக கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலியமிதகம கூறியுள்ளார். அவர் தற்போதைய நிலையில் அரசின் மானியம் கிடைக்காவிட்டால் பெற்றோலின் விலையை மறுசீரமைக்க வேண்டிய நிலை ஏற்படுமெனவும் அவர் மேலும் கூறினார். உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை நேற்று முன்தினம் பீப்பா ஒன்றிற்கு 55 அமெரிக்க டொலராக உயர்ந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

## சிறி.சு.கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதினைந்தாவது தேசிய மாநாடு சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் நேற்று ஆரம்பமானது.

மகரகமவில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் லங்கா சுதந்திரக் கட்சி உறு... கள் கலந்து கொண்டனர்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# வத்திராயன், தாளையடியில் அமைக்கப்பட்ட 134 வீடுகள் நேற்று மக்களிடம் கையளிப்பு

சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் தமது குடியிருப்புக்களை இழந்த மக்களுக்கு ஒரு தொகுதி வீடுகள் அமைக்கப்பட்டுக் கையளிககப் பட்டன.

வத்திராயன் மற்றும் தாளையடி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட 134 வீடுகள் நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டன. இரு வேறு பகுதிகளில் அமைக்கப்பட்ட இவ் வீடுகளில் வத்திராயன் பகுதியில் அமைக்கப்பட்ட 110 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு காலை 10.00 மணிக்கு ஆரம்பமானது. இந் நிகழ்வின் பொதுச் சுடரினை தமிழீழக் கடற்படையின் யாழ். மாவட்டத் தளபதி லெப்.கேணல். சலீம் அவர்களும், கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் சிவநாத், தமிழீழ கடற்படைப் போராளி இசைவீரன், தமிழீழ மாணவர் அமைப்பைச் சேர்ந்த மூவேந்தன், தமிழீழக் கடற்படைப் போராளி செஞ்சேரன் மற்றும் போரூட் நிறுவனப் பிரதிநிதி ஆகியோர் ஏற்றி வைக்க, அமைக்கப்பட்ட வீடுகளை கையளிக்கும் முகமாக வீடு ஒன்றினை வடமராட்சி கிழக்கு செயலணிக் குழுவைச் சேர்ந்த சுடர்மணி அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்ததோடு வீட்டிற்குரிய திறப்பினையும் அவ்வீட்டிற்குரியவரிடம் கையளித்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் அனுசரணையோடு அரச சார்பற்ற நிறுவனங்களினால் அமைக்கப்பட்ட இவ் வீடுகள் அடங்கிய குடியிருப்பானது மக்களுக்கான சகல அடிப்படை வசதிகளும் கொண்டனவாக அமைந்திருந்தன.

இதே போன்று தாளையடிப் பகுதியில் அமைக்கப்பட்ட 24 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு மதியம் 12 மணியளவில் நடைபெற்றது. இதில் பொதுச் சுடரினை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்களும், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிவநாத் அவர்களும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து வீடுகளை கையளிக்கும் முகமாக தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் அவர்கள் வீடொன்றின் நாடாவை வெட்டித் திறந்து வைத்ததோடு வீட்டிற்குரிய திறப்பினையும் அவ்வீட்டிற்குரியவரிடம் கையளித்தார்.

தொடர்ந்து ஏனைய பயனாளிகளுக்கான வீடுகள் கையளிக்கப்பட்டன. இந் நிகழ்வுகளில் கிராம அலுவலர்கள் அரச. அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொணடனர். (ச.11)



## காலி, தலைமன்னார் பகுதிகளில் கடல் மட்டம் உயர்ந்து ஊருக்குள் புகுந்தது

(கொழும்பு)

தலைமன்னார் மற்றும் காலிப் பிரதேசங்களில் நேற்று முன்தினம் இரவு திடீரென கடல் நீர் மக்கள் குடியிருப்புக்களுள் நுழைந்ததால் மக்கள் பதற்றத்திற்குள்ளாகினர்.

நள்ளிரவு வேளை மூன்று மணியளவில் திடீரென காலியில் கடல் நீர் அங்குள்ள சுனாமியால் அகதிகளானவர்களின் கூடாரங்களுக்குள் நுழைந்ததால் அவர்கள் அனைவரும் கூடாரத்தை விட்டு ஓடினர். சில இடங்களில் நேற்றுக்காலை வரை நீர் வடியாது நின்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி வலி-வடக்கு மக்கள் மறியல் போருக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலி-வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் தாம் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி எதிர்வரும் 18 ஆம் திகதி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் முன் கூடி மறியல் போராட்டம் நடத்தவுள்ளனர்.

யுத்த காலங்களில்தான் உறவுகளைப்பிரிந்து உடமைகளையிழந்து வாழ்விடங்களையிழந்து நிர்க்கதியாக வீதியில் நின்றோமென்றால் தற்போது கடந்த மூன்று ஆண்டு கால யுத்த நிறுத்தத்தின் போதும் நாம் நின்மதியிழந்து நிர்க்கதியாக வாழ வேண்டியுள்ளது. இவற்றுக் கெல்லாம் நாம் எமது மண்ணை எதிரியிடம் இழந்து நிற்பதே காரணம் ஆகவே எமது நிலங்களில நாம் மீண்டும் குடியேற அனுமதிக்க வேண்டும் என்று கோரியே இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

இதில் வலி-வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த அனைத்து மக்களையும் பொது அமைப்புக்களையும் முழுமையாக அணிதி ரண்டு இப்போராட்டத்தின் மூலம் தமது கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் படி இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தினர் கேட்டுள்ளனர். (சு)

# ஓட்டமாவடி ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர் மீது தாக்குதல்!

மட்டக்களப்பு ஓட்டமாவடிப் பிரதேசத்தில் கல்குடா முஸ்லிம் மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நேற்றைய ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகவியலாளர் ஒருவர் உட்பட நால்வர் தாக்கப்பட்டுள்ளனர்.

உள்நாட்டு தனியார் தொலைக் காட்சியொன்றின் நிருபரான அப்துல் லத்தீப், அவரது உதவியாளர், ஊடகவியலாளர் எம்.சுபைரின் புதல்வன் ரிஸ்னாஸ் ஆகிய ஊடகத் துறையுடன் தொடர்புடையவர்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாவட்ட அமைப்பாளரான எம்.பரீத் ஆகியோரே இவ்வாறு தாக்கப்பட்டுளளனர். குறிப்பிட்ட தொலைக்காட்சி நிறுவனத்திற்கு எதிராக கோசங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அதன் மாதிரி இலட்சினையொன்றையும் ஆர்ப்பாட்ட முடிவில் தீவைத்து எரித்துள்ளனர். ஊடகத் துறையினருடன் தொடர்புடையவர்கள் தாக்கப்பட்டபோது அங்கு விரைந்த பொலிசார் அவர்களை மீட்டனர். இதனையடுத்து ஏனைய ஊடகவியலாளர்களும் தமது பாதுகாப்பின் நிமித்தம் வெளியேறி விட்டனர். நேற்றைய ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் மாற்றுக்குழுவினரே (அமைச்சர் அமீர் அலியின் ஆதரவாளர்கள்) இருந்ததாக அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர். இதன் காரணமாகவே ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் தாக்கப்பட்டதாகக் கூறும் அப்பிரதேச மக்கள் கல்குடா முஸ்லிம் மக்கள் முன்னணி என்ற அமைப்பு ஒரு அநாமோதய அமைப்பு என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## நோர்வே...

கொள்ள முடியாமல் போய் விட்டது. இறுதியில் நாங்கள் நோர்வே அனுசரணையாளரின் முன்னேற்றகரமானவரைவை ஏற்றுக் கொண்டுள்ளோம். எப்படி இருந்தாலும் வரைவு நோர்வே அனுசரணையாளர்களால் நடைமுறை சாத்தியமாக்கப்படுவதற்கு சிறிலங்கா அரசாங்கமும் தனது ஒப்புதலை அழிக்க வேண்டும்.

இதேவேளை ஆழிப்பேரலையால் விளைந்த அழிவில் இருந்து மீளக் கட்டியெழுப்பவதற்கான உதவிகளை வழங்க பொதுக் கட்டமைப்பு ஒன்றை தாமதமின்றி ஏற்படுத்த வேண்டுமென நோர்வே நாட்டு அரசாங்கம் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.'

மேலும் கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகள் சிறிலங்கா இராணுவத்தின் பின்னணியுடன் பரா இராணு, வத்தினரால் குறிவைக்கப்படுவது நிறுத்தப்படுவதற்கு நோர்வே உடனடி நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்றும் நோர்வேத் தரப்பினருடன் கேட்டுக் கொண்டுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

நோர்வே நேரப்படி நேற்றுப் பிற்பகல் 1.00மணிக்கு இந்தச் சந்திப்பு நோர்வே வெளியுறவு அமைச்சர் செயலகத்தில் ஆரம்பமாகி நடை பெற்றது. இச் சந்திப்பு பிற்பகல் 3.00 மணிவரை நடைபெற்றது.

இதில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகக் கண்காணிப்பாளர் புலித்தேவன், மகளிர் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் தமிழ்விழி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நோர்வே அரச தரப்பில் ஜோன் பீற்றர்சன், சர்வதேச அபிவிருத்தி பிரதி நிதி அமைச்சர் லீவ்லுண்டே ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். இச் சந்திப்பிற்கு முன்னர் நேற்று முற்பகல் 10.00 மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் நோர்வேயின் சிறப்புத் தூதுவா எரிக்சூல்ஹெய்ம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதற்கு முன்பதாக தாயகத்தில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொணடுள்ள தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகியோர் அடங்கிய குழுவினர் நோர்வே நேரப்படி நேற்று முன்தினம் இரவு 10.30 மணிக்கு நோர்வேயைச் சென்றடைந்தனர். இக் குழுவினரை தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒஸ்லோ மாநகர சபை உறுப்பினர் பாஸ்கரன் ஆகியோர் வரவேற்றனர்.

## படையினரின்...

நிர்ணயிக்கின்ற கட்டத்துக்கு வந்துவிட்டோம். அதற்கான வலுவும் எமக்குண்டு.எவ்வித ஒடுக்குமுறைக்கும், பணியாத எமது சுதந்திர உணர்வை வெளிப்படுத்த கரம்கோர்த்து போராட தமிழ்மக்கள் அனைவரையும் முரசறைந்து அழைக்கின்றோம்.எதிர்வரும் நாட்களில் எழுச்சிமிகு பேரணிகளை நடாத்தி எமது உணர்வை வெளிப்படுத்த ஒன்றுதிரளுவோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## உந்துருளியை...

னர் தாக்க முற்பட்டதால் படையினர் மீது பொதுமக்கள் சரமாரியாகக் கற்களால் எறிந்து தாக்குதல் நடத்தினர். படையினர் வாகனத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதுடன் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை சராமாரியாக வீசியதுடன். பொதுமக்கள் மீது படையினர் கல்வீச்சையும் மேற்கொண்டனர். இச் சந்தப்பத்தைப் பயன்படுத்தி இராணுவத்தினர் வாகனத்தை சம்பவ இடத்தில் இருந்து அப்புறப்படுத்தியுள்ளனர்.

இராணுவ வாகனத்தின் அனைத்துக் கண்ணாடிகளும் முற்றாக உடைக்கப்பட்டன. பொதுமக்கள் வாகனத்தை எரிக்க எடுக்கப்பட்ட முயற்சி படையினராலும், பொலிசாராலும், தடுக்கப்பட்டது. பொலிசார் ஏவிய கண்ணீர் புகைக்குண்டுகள் இரண்டு வங்கிக் கட்டடத்தில் வீழ்ந்ததால் வங்கிப் பணியாளரும் பாதிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து படையினர் நடத்திய தடியடியினால் ஏழுபேர் படுகாயம் அடைந்துள்ளனர். சம்பவ இடத்திற்கு வந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் சம்பவம் குறித்து விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.இவ் அசம்பாவிதங்களின்போது காயமடைந்த ஏழு பொதுமக்கள் சிகிச்சைக்காக சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பதிலுக்கு பொதுமக்கள் மேற்கொண்ட கல்வீச்சில் காயமடைந்த மூன்று பொலிசார் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இதனிடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான கி சிவாஜிலிங்கம் சம்பவ இடத்திற்கு நேரில் வருகை தந்து சுமூக நிலையை ஏற்படுத்த முற்பட்டார். அவ் வேளையில் அவர் பயணித்த வாகனமும் விபத்திற்குள்ளானது.

எனினும் இரவு வேளை வரை நீடித்த வன்முறைகள் விடுதலைப்புலிகளது அரசியல் துறையினரது தலையீட்டையடுத்து சுமூக நிலைக்கு கொண்டு வரப்பட்டது. (28)

## துன்னாலை..

களை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் அவ்வீட்டில் உறக்கத்திலிருந்த குடும்பத் தலைவன் விழித்துக் கொண்டு அச்சிப்பாயை மடக்கிப் பிடித்து தாக்கத் தொடங்கியுள்ளார். இதனால் ஏற்பட்ட சத்தங்களைக் கேட்டு அங்கு கூடிய மக்கள் சம்பந்தப்பட்ட சிப்பாயைக்கூரிய ஆயுதங்களால் தாக்க முற்பட்டவேளை அவர் தன்னை மக்களின் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு தப்பி ஓடி அருகிலுள்ள தமது முகாமிற்குள் சென்று ஒழிந்துகொண்டார்.

இதனைக் கண்ட அவ்வூர் மக்கள் திரண்டு நேற்று அதிகாலை கலிகைச் சந்திக்கு அருகிலுள்ள இராணுவ முகாமிற்கு சென்று முறையிட்டபோது, அப்படியான சம்பத்தில் எந்தவொரு சிப்பாயும் ஈடுபடவில்லை என்றும் ,தமது முகாமை விட்டு எந்த ஒரு சிப்பாயும் சம்பவ நேரத்தில் வெளியேறவில்லை எனவும் படைப்பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் மேலும் கொதிப்படைந்த பொதுமக்கள் வீதிகளில் இறங்கி இராணுவத்தினருக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபட்டதுடன், வீதிகளில் ரயர் களைப் போட்டு எரித்து இராணுவத்தின் போக்குவரத்தையும் தடை செய்தனர்.

எனினும் பொது மக்களை போராட்டங்களை நடத்த விடாது தடுக்கும் முயற்சிகளில் சிறிலங்கா பொலி சாரின் கலகமடக்கும் படைப்பிரிவின் உதவியுடன் படையினர் ஈடுபட்டனர். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் படையினர் மீதும், பொலிசார் மீதும் கற்களை வீசியும், வெற்றுப் போத் தல்களை வீசியும் தாக்குதல் நடத்திய துடன் கலிகைச் சந்தியிலுள்ள இராணுவ முகாமுக்கும் தீ வைத் தனர். இதில் அம்முகாமின் ஒரு பகுதி எரிந்து நாசமானது.

பதிலுக்கு படையினரும் பொது மக்களை நோக்கி கண்ணீர் புகைக் குண்டுப்பிரயோகம் தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் நிலைமை மோசமடையத் தொடங்கியதைத் அடுத்து அங்கு வந்த கண்காணிப்புக் குழுவினரும், வடமராட்சியின் கட்டளைத் தளபதியும் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தியதுடன் சம்பந்தப்பட்ட சிப்பாய் கைது செயப்பட்டு அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்ததைத் தொடர்ந்து நேற்று நண்பகல் மக்கள் தமது போராட்டங்களை கைவிட்டனர். (33,27,கா)

## மட்டக்களப்பு...

வந்தவர்களே குண்டை வீசி விட்டு தப்பி ஓடியுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்புப் பொலிசார் மேற் கொண்டு வருகின்றனர்.

## தொழில்நுட்ப..

ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடியினை முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் அவர்கள் ஏற்றிவைத்தார். அடுத்த நிகழ்வாக அடிக்கல் நாட்டும் வைபவம் இடம் பெற்றது. முல்லை.மாவட்ட அரச அதிபர் (டபிள்யூ.யூ.எஸ்.சி.) நிறுவனப் பிரதிநிதி சீலன், முல்லைத் தீவு தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதி மூர்த்தி பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன் நிர்வாக சேவைப்பிரதிநிதி ஆகியோர் அடிக்கல் நாட்டி வைத்தனர்.

மேலும் பொருண்மிய மதியுரையக இயக்குனர் சுந்தரமூர்த்தி (டபிள்யூ.யூ.எஸ்.சி) நிறுவனப் பிரதிநிதி சீலன், முல்லை.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முகுந்தன், முல்லை.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனத்தின் தலைவர் சிவனடியார் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது